உ
சிவமயம்




யாழ்ப்பாணம் - மானிப்பாய்

உயர்குடித் தோன்றல்

முதலியார்

# வைத்திலிங்கம் மகேசன், J. P.

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

தோற்றம் :
12 - 09 - 1909

மறைவு :
05 - 03 - 1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர் எஸ் அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

யாழ்ப்பாணம் - மானிப்பாய்

உயர்குடித் தோன்றல்

# முதலியார்
# வைத்திலிங்கம் மகேசன், J. P.

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதலியார்

# வைத்திலிங்கம் மகேசன், J. P.

தோற்றம் :
12 - 09 - 1909

மறைவு :
05 - 03 - 1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலியார் வை. மகேசன்

## அவர்களின்

# வாழ்க்கைச் சரித்திரம்

அளவெட்டி வன்னியசிங்க முதலி வழித்தோன்றலாகிய மாதவர் என்பவருக்கு வேலாயுதர் என்னும் புதல்வர் இருந்தார். அவருக்கு தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் புலமை அடைந்தவரும் கந்தரோடை வித்தியாசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றியவருமாகிய இராமலிங்க உபாத்தியாயரும் அன்னப்பிள்ளை, சின்னப்பிள்ளை என்னும் இரு பெண்களும் பிள்ளைகளாவர். இராமலிங்க உபாத்தியாயர் நவாலியூர் தம்பையா உபாத்தியாயரோடு பல கோயில்களுக்குச் சென்று கந்தபுராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் ஆகிய புராணங்களை வாசித்தும் பயன் சொல்லியும் வந்தனர். கந்தரோடையில் கல்வி கற்பித்த காலத்தில் கடையிற் சுவாமிகளின் சீடராகிய குழந்தைவேற் சுவாமிகளுடன் தொடர்பு கொண்டு அவர்களது பிரதான சீடர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார். இவர் நவாலி மானிப்பாயைச் சேர்ந்த பிரபல்யமான கணபதிப்பிள்ளையின் ஏகபுத்திரியான பார்வதிப்பிள்ளையைத் தமது தர்ம பத்தினியாக பாணிக்கிரணம் செய்து இல்லற தர்மத்தை செவ்வனே நடாத்தி வந்தார். இறைவனருளால் அவர்களுக்கு ஒரு ஆண் மகவு பிறந்தது. தம் மகனுக்கு வைத்த லிங்கம் என்னும் நாமத்தைச் சூட்டினர். தமது ஏக புத்திரனை சிறந்த வழியில் வளர்த்ததன் பயனாக இறை வழிபாட்டில் ஆர்வம் கொண்டு தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் குறைவின்றித் தேறிப் பாக்கள் புனைவதிலும் திறமை வாய்ந்தவராகத் திகழ்ந்தார். சில காலம் கந்தரோடையில் படிப்பித்த பின்னர் கப்பளைத் தோட்டத்தில் தேயிலை உற்பத்தியாளராகக் கடமையாற்றினார். குழந்தைவேற் சுவாமிகளின் சீடரின் திருவாக்குப்படி கார்த்திகேசு என்பவரின் மகள் செல்லமுத்து என்பவரை விவாகஞ் செய்து இல்லறம் நடாத்தி வந்தனர். எல்லோருக்கும் மகிழ்வைக் கொடுக்கக் கூடியதாக சௌம்மிய ஆண்டு (1909-ம் ஆண்டு) புரட்டாதி 12-ம் திகதி மாலை 6-30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிக்கு அவர்களுக்கு ஒரு புதல்வன் பிறந்தான். பெற்ருேர் அப்புதல்வனுக்கு மகேசன் என்று பெயர் சூட்டினுர்கள். இவர் ஒரு வயதாயிருக்கும் போதே தாயார் நோய்வாய்ப்பட்டு இறந்து போனுர். பின் தந்தையார் குழந்தைவேற் சுவாமிகளின் பிரதான சீடராகிய அருளம்பல சுவாமிகளின் இரண்டாவது மகளைப் பலரின் வற்புறுத்தலின் பேரில் விவாகஞ் செய்தார். இவர் விவாகஞ் செய்து ஓரிரு மாதத்தில் சலதோஷத்தால் பீடிக்கப்பட்டு மரணமெய்தினுர். தாய் தந்தையரை இழந்த ஒரே ஒரு பேரனை இவரது பேரன் பேத்தி பெரியதாய் ஆகிய மூவரும் கண்ணுங் கருத்துமாகப் பேணி வளர்த்தனர். மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலையில் தனது ஆரம்பக் கல்வியைக் கற்றுப் பின் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையிலும் சிறந்த மாணுக்கனுகத் திகழ்ந்தார். பின்னர் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் படித்துப் பல விளையாட்டுக்களிலும் பங்கு பற்றினுர். அங்கு உயர்தரக் கல்வி வரை கற்று ( *Senior Cambridge* ) சுகயீனக் காரணமாக *WithdrawlTest* ல் தடுக்கப்பட்டதால் யாழ்ப்பாணக் கல்லூரியில் சேர்ந்து கல்வி கற்று தேர்ச்சி பெற்ருர். யாழ்ப்பாணக் கல்லூரியை விட்டதும் கொலன்னுவ பொறியியல் தொழிற்சாலையில் சேர்வதற்கு விண்ணப்பம் செய்து தெரிந்தெடுக்கப்பட்ட போதும் பொருள் நெருக்கடி காரணமாக அரசாங்கம் தாமதப்படுத்தவே சேரமுடியாது போய்விட்டது.

வன்னியசேகர முதலியார் வம்சத்தில் தோன்றிய நாகமுத்து வைத்திலிங்கத்தின் இரண்டாவது மகள் பொன்மணியை 1933-ல் விவாகஞ் செய்தனர். காலம் சென்ற இராசமணி சோமசேகரன், வைத்திலிங்கம் கொம்பனியின் பிரதான நிர்வாகஸ்தராகிய பாலசுப்பிரமணியம். வைத்தியகலாநிதி இராமச்சந்திரன், லண்டனில் ஆசிரியரான ஸ்ரீஸ்கந்தராசா, காலம் சென்ற மகேந்திரராஜா, காலம் சென்ற விக்னராஜா, வைத்திய கலாநிதி நாகேந்திரா பெண் ஜெகதீஸ்வரி. பொறியியலாளர் சிவதாசின் மனைவி இரத்தினேஸ்வரி, கலாநிதி விக்னராஜா பெண் மணிமேகலை ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னுரது பெரிய தாயாரின் மகள் காலம் சென்ற ராஜாவின் மனைவி செல்வரத்தினத்தை தனது உடன் பிறந்த சகோதரியாகவே பாராட்டி வந்தார். அவரது பிள்ளைகளான காலம் சென்ற நடராஜா பெண் தையல்நாயகி, நடராசாவின் மனைவி சிவனேஸ்வரி, காலம்சென்ற சத்தியநாதன் பெண் மகேஸ்வரி காலம்சென்ற குமாரசுவாமியின் மனைவி தனலக்சுமி, கார்த்திகேசு. நடராசா, சிவலிங்கம் ஆகியோர் அன்னுரது மருமக்களாவர். காலம் சென்ற அரியகுட்டி சுப்பிரமணியம் (மஸ்கன்ஸ்), அரியகுட்டி நாகராசா ஆகியோர் அவரது மைத்துனராவர். காலம்சென்ற ம. சோமசுந்தரம் அன்னுரது உடன் பிறவாச் சகோதரராவர். காலம் சென்ற கந்தையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வின் மனைவி சுகிர்தரத்தினம் இவரது சிறிய தாயார் ஆவர். மட்டக் களப்பில் வசிக்கும் திரு. திருமதி அருளானந்தம், காலம் சென்ற மாத் தளை செல்லையா ஆகியோர் அவரது நெருங்கிய உறவினராவர்.

விவாகஞ் செய்த பின்னர் மாமனுடன் கொழும்பு வைத்தி லிங்கம் கொம்பனியில் கடமையாற்றினர். பின்னர் யாழ்ப்பாணத்தில் வைத்தி லிங்கம் கொம்பனி கிளையை பொறுப்பேற்று நடாத்தி வந்தார். காலம் சென்ற மங்களாம்பிகை, கணேசன், நடேசன், புவனேந்திரன், லலிதாம் பிகை ஆகியோரைப் பிள்ளைகளாகப் பெற்றுர். 1946-ம் ஆண்டு இவ ரது மனைவி நோய்வாய்ப்பட்டு இறைவடி சேர்ந்தார். பொன்மணியின் மூத்த சகோதரியான இராசமணி என்பவர் சட்டத்தரணி நல்லையாவை விவாகஞ் செய்து பாலசுப்பிரமணியம், பாலகிருஷ்ணன், செல்வராசா மனைவி பாலேஸ்வரி, காலம்சென்ற பாலச்சந்திரன், காலம்சென்ற இரத் தினபாலசிங்கம், மனைவி இராஜேஸ்வரி, வெட்பிரகாஸ் ஆனந்தின் மனைவி ரூபாவதி, பாலேந்திரா ஆகியோரைப் பிள்ளைகளாகப் பெற்றனர். மனைவியை இழந்திருந்த காரணத்தால் விவாகரத்துச் செய் திருந்த இராசமணியைப் பலரின் வற்புறுத்தலின் பேரில் இரண்டாம் தாரமாக மணம் செய்தார். அதன் பெறுபேருக காலஞ்சென்ற வரத ராஜன் என்னும் புதல்வனைப் பெற்றுர். பெரியவிளானைச் சேர்ந்த காலஞ் சென்ற சிவகுரு மகன் நடராஜா, காலஞ்சென்ற மஸ்கன் சுப்பிரமணி யத்தின் மகள் சுபத்திராதேவி, காலஞ்சென்ற திருநாவுக்கரசு மகள் சுபத்திரா, காலஞ்சென்ற நவரத்தினராசா மகள் சரோஜினிதேவி, காலஞ் சென்ற நாகமுத்து மகன் கணேசு, காலஞ்சென்ற நடராசா மகள் வசந்த மல்லிகா ஆகியோரை மருமக்களாகப் பெற்றனர். ஜனனி, சசிதரன், துஷ்யந்தரன், ஹாஷினி, ஷாமினி, கிரிதரன், தருணி, பகீரதன், ஈசானி, ஆகியோரைப் பேரப்பிள்ளைகளாகப் பெற்று மகிழ்ந்தார்.

இவரது முதல்மனைவி பொன்மணி நோயுற்றிருக்குங் காலத்தி இந்தியாவிலுள்ள பலதலங்களுக்கு அவரின் விருப்பப்படி அவரை அழைத்துச் சென்றுர். பின்னரும் காலஞ்சென்ற இராசமணியுடன் காலஞ்சென்ற வரதராஜன் குழந்தையாயிருக்கும்போது வட, தென் இந்தியாவுக்கு தலயாத்திரை மேற்கொண்டார்.

இவர் வைத்திலிங்கம் கொம்பனியின் நிர்வாகியாகக் கடமை யாற்றும்போது பல கட்டிடங்களை ஒப்பந்தம் எடுத்துத் திறமையாகக் கட்டி முடித்தார். அக்கட்டிடங்களுள் சிறப்பாக யாழ்ப்பாண செயலகம் யாழ்ப்பாண வைத்தியசாலையின் 3 பிரதான மாடிக் கட்டிடங்கள், யாழ்ப் பாணக் கல்லூரி நிர்வாக அலுவலகம், இணுவில் மிஷன் வைத்தியசாலை நிர்வாக அலுவலகம், மானிப்பாய் மிஷன் வைத்தியசாலை நிர்வாக அலு வலகம், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாடிக்கட்டிடம், நெல்லியடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாவித்தியாலய மாடிக்கட்டிடம், காங்கேசன்துறை நிர்வாக அலுவலகம், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை நிர்வாக அலுவலகம், சாவகச்சேரி நீதிமன்றம், சுன்னுகம் மின்சார நிலையம், மானிப்பாய் இந்துக் கல்லூரி மாடிக்கட்டிடம் முதலியனவும் இன்னும் பலவும் இவற்றுள் அடங்கும்.

இவை மட்டுமன்றி ஆலயங்களிலும் தனது கவனத்தைச் செலுத்தி அக்கட்டிடங்களை மேற்பார்வை செய்து வந்தார். அவற்றுள் சில நவாலி சிந்தாமணிப்பிள்ளையார் ஆலயம், நாச்சிமார் கோயில். நவாலி அட்டகிரி கந்தசுவாமி கோயில், நாகதம்பிரான் கோயில், குளத்தடி ஞானவைரவர் கோயில், மானிப்பாய் மருதடி விநாயகர். சுதுமலை முருகன் கோயில் ஆனைக்கோட்டை சம்பந்தப் பிள்ளையார் கோயில், நல்லூர் சிவன்கோயில், ஊரெழு கண்ணகி அம்மன் கோயில் இன்னும் பல அடங்கும்.

இவர் கட்டிடக்கலையில் மட்டுமன்றி சிற்பக் கலையிலும் சிறந்தவராக விளங்கினுர். தனது மேற்பார்வையில் தனது வீட்டிலேயே சிற்பங்களைச் செய்வித்து அவர்களுடன் சேர்ந்து தானும் சிற்பங்களுக்கு மெருகூட்டி அதில் இன்பத்தையுங் கண்டார்.

ஆனைக்கோட்டை கிராமசபைத் தலைவராக இருக்கும்போது கல்லுண்டாயில் வீடமைப்புத் திட்டத்தை ஆரம்பித்தார். அத்துடன் இவர் காலத்திலேயே நவாலிக்கு மின்சார ஒழுங்குகள் செய்யப்பட்டன. வேறும் பல தொண்டுகளைச் செய்தார். இவரது சேவைகளைப் பாராட்டி இவர் ஆரம்பித்த திட்டத்துக்கு மகேசன் சதுக்கம் என்றும், இவர் வசிக்கும் வீதிக்கு முதலியார் மகேசன் வீதி என்றும் பெயரிட்டனர். இவரது சேவைகளை அறிந்த அரசாங்கம் முகாந்திரம் என்னும் பட்டத்தைக் கொடுத்ததுடன் சமாதான நீதவான் என்ற பட்டத்தையும் பின்னர் முதலியார் பட்டத்தையும் வழங்கியது. ஊரில் ஏற்பட்ட சிறு, சிறு பிணக்குகளையெல்லாம் நேரில் சென்று சமாதானமாகத் தீர்த்து வைப்பதில் முன்னின்று உழைத்தார்.

தனது தகப்பன் பேரன் முதலியோர் தொடர்புகொண்ட கீரிமலை குழந்தைவேற் சுவாமிகளின் மடாலயத் தலைமைப் பதவியை ஏற்று இறக்கும்வரையிலும் அதற்குரிய குருபூசைகள் ஒழுங்காக நடைபெறுவதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்துவந்தார். அதற்குரிய காணிகளை விற்று அப்பணத்தை நிரந்தர வைப்பிலிட்டு அதன் வட்டியைக் கொண்டு நித்தியபூசை செய்வதற்கு ஒழுங்குகளைச் செய்தார். சமயப்பிரசங்கங்கள் செய்வதிலும் தனது ஒருபகுதி நேரத்தைச் செலவிட்டார். தொடர்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக 63 நாயன்மாரது சரித்திரத்தைப் பிரசங்கம் செய்தார். மதுரை திருஞான சம்பந்தர் ஆதீனம் இவரது சமயத் தொண்டைப் பாராட்டி "சிவநெறிப் புரவலர்", "திருப்பணித் தவமணி" என்னும் பட்டங் களை வழங்கிக் கௌரவித்தது.

வியாபாரக் கட்டிட ஒப்பந்தங்கள், சமய சம்பந்தமான நிகழ்ச்சி கள், சமூகத்தொண்டு முதலியவற்றில் தனது கவனத்தைச் செலுத்தினு லும் தனது பிள்ளைகளைப் படிப்பித்து அவர்களை முன்னேற்றப் பாதை யில் ஈடுபட வைத்தார். யாழ்ப்பாணத்தில் ஒரு பெரிய தொழிற்சாலையை அமைக்க வேண்டும், பலருக்கு வேலைவாய்ப்பும் கொடுக்க வேண்டும் என்ற இவரது விடாமுயற்சியின் பயனாக மூத்தமகனும் மற்றும் நிர்வா கிகளும் சேர்ந்து யாழ்ப்பாணத்திலுள்ள ஈவினையில் அஸ்பெஸ்ரஸ் சீமேந்து தொழிற்சாலையை ஆரம்பித்தார். அதன் நிமித்தம் இன்று அதில் ஆயி ரக்கணக்கானோர் வேலைசெய்யும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

சிறு வயதிலேயே அவருக்கு விவசாயத்தில் ஈடுபாடு இருந்தமை யால் கடைசிவரை அதில் ஈடுபட்டு வந்தார். காலம்சென்ற மகன வரத ராஜனின் விருப்பத்திற்கு இணங்கி முந்திரிகைப் பயிர்ச்செய்கையிலும் ஈடுபட்டு வந்தார். இப்படி இருக்கும் காலத்தில் இவர் மனைவியார் திடீரென நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் நீண்டகாலம் இருக்க நேரிட்டது. தாயார் திடீரென சுகவீனமுற்றதால் மனமுடைந்த மகன் வரதராஜன் அவரைப் பழைய நிலைக்குக் கொண்டுவர இரவு பகல் பாராது பாடுபட்டு வந்தார். அதன்நிமித்தம் அவருக்கு ஏற்பட்ட நோயை அவரே அறியாதிருந்தமையால் நோய் முற்றிய பின்பே சிகிச்சைசெய்ய நேரிட்டது. ஆனல் காலன் அவரை விட்டுவைக்கவில்லை. 1979-ம் ஆண்டு சித்திரை மாதம் 27-ம் நாளில் சிவபதமடைந்தார். அதனைத் தொடர்ந்து மனைவியார் 19-6-79-ல் இறைவனடி சோந்தார். இளைய மகனையும் மனைவியையும் திடீரென இழந்ததனுல் மனமுடைந்த வராயிருந்தாலும் வெளியில் தனது கவலையைக் காட்டாது பொதுச் சேவையில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார். பேரப்பிள்ளைகளில் மிகவும் அன்புடையவராக இருந்தார். சிறு வயதிலேயே தந்தையை இழந்த தனது பேர்த்தி ஈசானியிடம் மிகவும் பாசத்தை வைத்துத் தானே உணவூட்டி யும் வந்தார்.

இக்காலத்தில் மானிப்பாயிலிருந்த இந்துசமய விருத்திச் சங்கத்தை மானிப்பாய் கோவிற்பற்று இந்துசமய விருத்திச் சங்கமாக மாற்றி அச் சங்கம் நிரந்தரமாக நடைபெற அதற்கென ஒரு தர்மகர்த்தாச்சபை உண்டாக்கி நிரந்தர வைப்பில் பணத்தை சேகரித்து வைத்துக் காலங் கால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக நடைபெற ஒழுங்குகள் செய்தார். இப்படி இருக்கும் காலத்தில் இவரது மூத்தமகள் மங்களாம்பிகை காலமானார். இவர் இந்துசமய விருத்திச் சங்கத் தலைவராக இருந்த காலத்தில் பண்ணிசையை வளர்க்க ஊர்ச்சங்கங்கள் தோறும் அரும்பாடுபட்டு வந்தார். அத்துடன் பாடசாலைகளில் சமய சோதனைகளை நடாத்துவதற்கும் கோவில்கள் தோறும் நந்தவனங்கள் அமைக்கவும் அரும்பாடுபட்டார்.

அவரது குலதெய்வமாகிய வைரவர் கோவிலில் பொங்கல் திருவிழா மாத்திரமே நடைபெற்று வந்தது. அதனை சென்ற வருடம் தொடக்கம் அலங்கார உற்சவமாக நடைபெறுவதற்குக் கோயிலைப் புனருத்தாரணம் செய்து நந்தி பலிபீடம் அமைத்ததுடன் கோவிலுக்குச் செல்வதற்கும் புதிய பாதையும் அமைத்து அலங்காரத் திருவிழாவைத்திறம்பட நடத்தினர். இறுதிக் காலத்தில் ஆதரவற்ற சிறுர்களுக்கு ஒரு அனாதை இல்லம் அமைக்க எண்ணித் தனது மனைவி பொன்மணியின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்ட 'மணிமண்டபம்' என்னும் கட்டிடத்தை திருத்தி ஆதரவற்ற குழந்தைகளைப் பராமரிக்கும்படி தர்மகர்த்தாச் சபையிடம் ஒப்படைத்தார். அவர்கள் அக்கட்டிடத்துக்கு 'மகேஸ்வர இல்லம்' என்னும் பெயரைச் சூட்டினர். இக்கட்டிடத் திறப்பு விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேருரை நிகழ்த்தியதே இவரது இறுதி நிகழ்ச்சியாகும். தனது கனவு நனவாகியதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைந்திருக்கும் வேளையில் திடீரென உடல் நலிவுற்று நோய்வாய்ப்பட்டு தனியார் மருததுவ மனையில் சிகிச்சை பெற்று வந்தார். அங்கும் தனது நோயைப்பற்றி சிந்தியாது மகேஸ்வர இல்லத்தோடு சம்பந்தப்பட்டவர்களைக் கூப்பிட்டுத் தனது கருத்துகளை வெளிப்படுத்திய வண்ணமே இருந்தார். கொழும்புக்கும் போய் வைத்தியம் செய்தால் தனது உடல்நிலை சீராகி திரும்பவும் பொதுக்கைங்கரியங்களில் ஈடுபடலாம் என்ற நோக்கத்துடனும் மகேஸ்வர இல்லத்துக்குத் தேவையான நிதியைப் பெறலாம் என்ற நோக்கத்துடனும் கொழும்பு சென்ருர். அங்கும் வைரவர் கோயில், மகேஸ்வர இல்லம் என்பனவற்றைப் பற்றியே கதைத்துக்கொண்டிருந்தார். சுயநினைவற்ற நிலையில்கூட மகேஸ்வர இல்லத்துக்குப் போகவேண்டும் காரை எடு என்று கூறிக்கொண்டே இருந்தார். இறுதி நேரத்தில் எவ்வித கவலையோ சலனமோ அற்றவராய் சிறு புன்சிரிப்புடன் இருக்கும் நேரத்தில் சிவ கணங்களே அன்னாரை அழைத்துச் சென்றன என்பது எமது கருத்து, அவரது ஆதமா இறைவனது குஞ்சித பாதங்களில் சாந்தியடையுமாறு பிரார்த்திப்போமாக.

சுபம்.

குருபாதம்

சைவ மெய்யன்பர்களே,

அமரர் முதலியார் திரு. வை. மகேசன் அவர்கள் நல்லை ஆதீன ஆலோசனைச் சபையில் அங்கத்துவம் வகித்து ஆதீன வளர்ச்சிக்கான ஆலோசனைகளையும் பகர்ந்து அன்பளிப்புக்களையும் செய்த பெருமனது படைத்த சைவப்பெரியார் அவர்கள் ஒரு வர்த்தக நிபுணர் மட்டுமல்ல தமிழ் மக்கள் எல்லோரும் இன்புற்றுச் சீரோடு வாழ வேண்டும் என்ற மனப்பான்மை கொண்டவர். அவர்கள் ஆற்றிய சமூகப் பணிகளே இதற்குச் சான்று. ஏழைகளும் வாழவேண்டும் என்று நினைக்கும் செல்வந்தர் சிலரே. முதலியார் அவர்கள் மகேஸ்வர இல்லம் என்ற அனாதை இல்லத்தை அமைத்துக் கொடுத்தது ஒரு பெரும் புண்ணிய கைங்கரியம். அவர்கள் எந்த ஒரு கருமத்தையும் நேரம் தவறாது, ஒழுங்காகப் பிழையின்றி நிறை வேற்றவே விரும்புவார். 'செய்வன திருந்தச் செய்' என்று வற்புறுத்தி மற்றவர்களையும் ஊக்குவிப்பார். சைவ உலகு சிறந்ததொரு சைவ, சமூக சேவையாளரை இழந்து விட்டது.

அவர்களின் ஜீவாத்மா எல்லாம் வல்ல இறைவன் இணையடிகளைச் சார்ந்து நித்திய, நிரதிசய பேரின்ப நிலை எய்த வேண்டுமென உளமாரப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய ஸ்வாமிகள்.

---

" யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதற்கு
என் கடவேன். "

எமது முதலியார் மகேசன் அவர்கள் எங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்து அட்டகிரிக் கந்தன் சிவன் கோவில் திருப்பணி வேலையின் முன் கூட்டியாக நின்று கும்பாபிஷேகம் வரையில் எமக்கு உதவியாக நின்று அரும்பணி செய்தார்கள். அவரை ஒரு காலமும் மறக்க முடியாது. அவரின் பல சேவைகள் இன்றைக்கும் நினைக்கக் கூடியதாக இருக்கிறது. அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கிறோம்.

" நெருநலுள னொருவனின் றில்லை யென்னும்
பெருமை உடைத்திவ் வுலகு ".

சாந்தி.

நவாலியூர்

சோ. சண்முகரத்தினக் குருக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளப்பரிய சமயப் பணியாளர்

முதலியார் வை. மகேசன் அவர்கள் எம்மைவிட்டு நீங்கிய இடத்தும், எம்மிடை விட்டுச் சென்ற அழியாச்சின்னங்கள் அவர் வாழ்க்கையின் போது நிகழ்த்திய பல்வகைப் பணிச் சிறப்புக்களாகும். தலைசிறந்த தொழில் நிர்வாகியாகத் திகழ்ந்ததோடமையாது, சமுதாயத்தில் எப்படிப் பயனுற வாழ வேண்டும் என்பதை வாழ்ந்து காட்டியவர்கள் முதலியாரவர்கள். இவராற்றிய சமுகப்பணியின் தனித்தனி அமிசங்களோ, பெரும் பேச்சுக்களோ, பெரும் கட்டுரைக்களோ பொருளாயமையவல்லன. சமுகப் பணியின் சிறப்பு வாய்ந்ததொரு தனி அமிசமாக விளங்குவது அதன் இன்றியமையா வுறுப்பாக விளங்கும் சமயப்பணி.

முதலியார் அவர்களின் சமயப்பணி அளப்பரியது. அவர்கள் வாழ்க்கையின் மூதிர்ச்சிக்கும் சிறப்புக்கும் அவர்கள் ஆற்றிய சமய சேவைகளே சான்று பகரும். வாழ்க்கைவின் பிற்பகுதியில் அவர்கள் தலைசிறந்த கர்ம யோகியாகத் திகழ்ந்தார்கள். தாம் செய்ய வேண்டியவை இவை என்பதைத் துணிபாகத் தெரிந்துணர்ந்து கொண்ட முதலியாரவர்களுக்குச் சமயப் பின்னணியில் அமைந்த அவர் வாழ்க்கையே, ‘ என் கடன் பணிசெய்து கிடப்பதே ’ என்னும் தத்துவத்தைக் கடைப்பிடிக்குமாறு தூண்டியது.

தமது துணைவியார் நெடுங்காலம் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையிலேயே பெரும் பொழுதைப் போக்கவேண்டி நேரிட்ட நிகழ்ச்சியும், தன்னுடன் கூடிவாழ்ந்து தொழிற்றுறையிற் பயிற்சிபெற்று வந்த மைந்தன் திடீரென நோயுற்ற நிகழ்ச்சியும் மனைவி. மைந்தர் ஆகிய இருவரும் படிப்படியாக மறைந்தமையும் முதலியாரவர்கள் வாழ்க்கையின் பின்கட்டத்தில் நிகழ்ந்த பெரு நிகழ்ச்சிகள். ஆயினும் இவற்றால் தளர்ச்சியுறாது கடமையில், அதாவது செய்வதற்கு எது உரியதோ அதைச் செய்வதில் இவரிடத்தில் ஊக்கம் மேலிட்டது. சமயப் பின்னணியில், பகவத்கீதையில் புகட்டப்படும் அநாசக்தி யோகநெறி வழிகாட்ட, கடமையில் கண்ணுங் கருத்துமாயிருக்கும் திறமை இவரிடம் படிப்படியாக வளரலாயிற்று.

“ ஒன்றிலும் பற்று வைக்காது செய்யவேண்டியதைச் செய் ” என்ற கீதோபதேசம் இவரது வழிகாட்டியாக அமைந்ததனால் போலும் பலனை அவாவாது செய்ய வேண்டியதைச் செய்யும் நெறிநின்று, தொழில்துறையிலும், சமுதாயத்துறையிலும், சமயத்துறையிலும் உறுதியுடன் தாம்செய்ய வேண்டியவற்றை இறுதிமூச்சு ஓயும்வரை செய்து வந்தார். இத்துறைகளில் ஈடுபட்டு ஆற்றிவந்த பணிகள் இவரைச் சிறந்த கர்ம யோகியாக, கர்மவீரனைத், திகழ வைத்தது.

வாழ்க்கைப் பின்பகுதியில், இம்மை நினைவுகளோடு மட்டும் நின்றுவிடாது, மறுமை என்று ஒன்று உண்டு. அதற்கு ஆவள செய்தல் வேண்டும் என்பதையும் அழுத்திக் கூறுவது போன்று அவர்கள் செயல்கள் அமைந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் சிந்தனை, திருமுறை ஓதுதல், திருமுறையை முறையாக ஓதப் பயிலுவித்தல், சமய நிகழ்ச்சிகளைச் செவ்வனே நிகழ்த்துவித்தல் ஆகியவற்றில் விருப்பம் இவருக்குப் படிப்படியாக வளரலாயிற்று. திருமுறை ஓதுவதில் தாமும் இணைந்து திருமுறை ஓதியும், திருமுறைப் பயிற்சியைத் தம்மால் இயன்றவரை ஆலயங்களில் நேரடியாகப் பங்கு பற்றியும் பரப்பி வந்தார். சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் சமயப் பிரசாரம் செய்து வந்தார். பண்ணுடன் தேவாரங்களைச் செவ்விதாக ஓதும் பாரம்பரியத்தை வளர்ப்பதற்கும், அதற்காக நிதி நிறுவுவதற்கும் அயராது உழைத்தார். இதையிட்டு அரசாங்கத்திடம் பல உதவிகளை நாடியும், அமைதி குன்றிய இற்றைச் சூழ்நிலை, இவர் நினைத்ததைச் செயற்படுத்த முடியாதவாறு தடுத்து நிறுத்திவிட்டது.

நவாலி சிந்தாமணி விநாயகராலயத்தில் ஆண்டுதோறும் விநாயகஷஷ்டித் தினத்தன்று நிகழும் கணபதிஹோமம் அபிஷேக ஆராதனைகளில் வெளிப்படும் சிறப்பு இவருக்குச் சமயக் கிரியைகளில் இருக்கும் பற்றையும் அதை நிறைவேற்ற ஆவன செய்வதில் வேண்டப்படும் திறமையையும் காட்டி நிற்கின்றது. இவ்வாலயத்தில் மூலக் கருவறைத் திருப்பணி இவர் மேற்பார்வையில் நிகழ்ந்தது. இது இவர் கலைத்திறமையையும் எடுத்துக் கொண்ட பணியைச் செவ்வனே நிறைவேற்றுவதில் இவருக்குரிய சாமர்த்தியத்தையும் இவரிடம் தெய்வத் திருப்பணியிலிருந்த ஈடுபாட்டையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

நல்லூர் சிவன் கோவில் ஆறுமுகப்பெருமான் எழுந்தருளியிருக்கும் ஆலயமும், திருத்திச் செப்பனிடப்பட்ட முன்மண்டபங்களில் சீராக்கப்பட்ட சீமந்து மேல் தள வரிசைகளின் சீரமைப்பும் இவரது மேற்பார்வையிலேயே அமைந்ததனால் இன்று சிறப்புற விளங்குகின்றன. இங்கு ஆண்டுதோறும் கார்த்திகைக்கடைசிச் சோமவார தினத்தன்று மகாசங்காபிஷேக உற்சவங்கள் இவரது உபயமாக நிகழ்ந்து வருகின்றன. தாம் இவ்வாறு பொறுப்பேற்று நிகழ்த்திவரும் உபயங்கள் தமக்குப் பின்னரும் சிறப்பாக நடைபெற வேண்டும் என்ற எண்ண மேலீட்டினால் இவை தொடர்ந்து நிகழ்வதற்கு வேண்டிய பொருள் தரவல்ல வைப்பு நிதி இவரால் நிறுவப்பட்டது போற்றுதற்குரிய அருஞ் செயலாகும்.

மிகவும் அமைதியான தோற்றம், மிகவும் மென்மை வாய்ந்த பேச்சு இவரிடம் சிறப்பாக அமைந்ததனால், அவராற்றிய சேவைகளை அவர் தோற்றத்திலும், பேச்சிலும் கண்டு உணர முடியாதவர்களாய், அவர் தொடரும் நிலையில் விட்டுச் சென்ற பணி அவர்தந்த அமைப்பினால் தொடர்ந்து நிகழுவதைக் கண்ணுறும்பொழுதே அவர் தம் சமயப் பணியின் தனிச்சிறப்பின் பொலிவை நேரே காணக் கூடியவர்களாக இருக்கிறோம்.

என்றென்றும் வாழ்க அவர் தம் சமயப் பணி
அவர் ஆற்றியபணி அனைவர்க்கும் வழிகாட்டியமைவதாக.

கா. கைலாசநாத குருக்கள்

பேராசிரியர் கா. கைலாசநாத குருக்கள்,
இந்து நாகரிகத் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம், 18-3-1986.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர்

# முதலியார் மகேசன் ஜே. பி. அவர்கள்

சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் நடைபெறும் இருபதாம் நூற்றாண்டிலும் மாணிப்பாய்ப் பட்டினம் பலபெரியார்களைத் தமிழினத்துக்கீய்ந்தது. இவருள் அனேகர் கொழும்பில், கறுவாக்காடு என்று சிறப்பாக அழைக்கப்பட்டு வந்த, செல்வந்தர் குடியேற்றப்பகுதியில் வசித்து இலங்கை முழுதுக்கும் பேரும் புகழும் ஈட்டிக் கொடுத்தார்கள். கருவாக்காட்டில் குடியேறாமல் மானிப்பாயாகிய தன் சொந்த ஊரிலே இருந்துகொண்டே கருவாக்காட்டாருடன் சமமாக மதிக்கப்படக்கூடியவகையில் ஈழவள நாட்டுக்கும், சிறப்பாக மானிப்பாய்க் கோயிற்பற்றுக்கும், வளமும் புகழுந் தேடித் தந்தவர் முதலியார் மகேசன் எனில் மிகையாகாது. எழுபது ஆண்டுவரை நிலவுலகில் சீருஞ்சிறப்பும் மிக்கவராய் வாழ்ந்த அவர் தனக்கென வாழாது மன்னுயிர் தழைக்க வாழ்ந்தவர் திருவருட் சகாயத்தை நிரம்பப்பெற்றுச் செல்வந்தராகவும், தருமசீலராகவும் துலங்கியவர். தமிழ்மக்களுள் பலர் பொருளை ஈட்டுவதிலுள்ள ஈடுபாடு ஈவதில்காட்டுவதில்லை. முதலியார் அவர்களோ இதற்குப் புறநடையானவர். கண்ணியமாக, ஆடம்பரமற்ற வாழ்க்கையிலமர்ந்து கொண்டு தன்செல்வத்தை சமய சமூக பொதுத்தருமங்களுக்கு வாரி வழங்கி வந்த வள்ளல் அவர். தனிப்பட்ட மனிதரும் குடும்பங்களும், ஸ்தாபனங்களும் அவரையண்டி முன்னேறியவை கணக்கற்றவை. இலங்கை அரசு அவருக்கு முதலியார், ஜே. பி., முதலிய பட்டங்களைக் கொடுத்துக் கௌரவித்தது. ஏழைகள் அவரை அண்டிப்பிழைத்து வள்ளல் எனப் போற்றினார்கள். தருமங்களை விருத்திசெய்ய விரும்பினவர்கள் அவருடைய தலைமையை நாடினர். அவருடைய 76 ஆண்டு உலகவாழ்க்கையில் கடைசிப் பத்தாண்டுச் சரித்திரம் பொன்னெழுத்தில் பொறிக்கப்படவேண்டியது. வாழ்க்கை நிலையில்லாதது, எப்போ முடிவு வருமெனக் கணிக்க முடியாதது. “புல்நுனிமேல் நீர்போல யாக்கை நிலையாமை என்றெண்ணி இன்னினியே செய்க அறவினை” என்ற ஜைனமுனிவர் வாக்கையுணர்ந்தவர்போல, உடல்நிலை தளரத்தொடங்க முதலியார் அவர்களும் தீவிரமாகத் தருமங்களில் ஈடுபடத் தொடங்கினார். 1956ல் மானிப்பாயில் ஆரம்பிக்கப்பட்ட இந்து சமய விருத்திச் சங்கத்தின் தலைமைப் பதவியை 1981ம் ஆண்டு தானே ஏற்றார். சங்கத்தின் சமயப் பணிகளை விரிவடையச் செய்தார். மானிப்பாய்க் கோயிற்பற்றிலுள்ள மானிப்பாய், நவாலி, ஆனைக்கோட்டை, சுதுமலை, சண்டிலிப்பாய் ஆகிய ஐந்து கிராமங்களிலும் தனித்தனி ஐந்து கிளைச்சங்கங்கள் உற்பத்தியாயின. நாலுபக்கமும் ஒளியை வீசிக்கொண்டு உயர்ந்து நின்று பரந்தகடலில் ஊசலாடும் மரக்கலங்களுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கம் போல, முதலியார் மகேசன் நடுநாயகமாக நின்று சைவசமயத்தைப் பலதுறைகளிலும் வளர்த்தார். ஊர்மக்கள் அவர்பின் அணியில் ஒன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்து உழைத்தார்கள். சமயபாட வகுப்புகள், நாயன்மார் குருபூசைகள், திருமுறைப் பண்ணிசை வகுப்புக்கள், இன்னோரன்ன பலதிறப்பட்ட சைவப் பணிகள் மலர்ந்தன. தகைமை வாய்ந்த பண்ணிசை ஆசிரியர்களின் கீழ் ஊர்கள் தோறும் நூற்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள் முறைப்படி வட இலங்கைச் சங்கீதசபையின் ஆறாண்டுத்திட்டத்திற்கமைய, பண்ணிசை கற்று ஆறுவதாண்டுப் பரீட்சையின் தெரிவின் மூலம் பண்ணிசை ஆசிரியர்களாக வரும் வாய்ப்பைப்பெற்றனர்கள். ஒவ்வொரு சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஊர்களெல்லாம் பண்ணிசை ஒலித்தது. அவ்வளவில் முதலியார் மகேசன் திருப்தியடைந்துவிடவில்லை. இத்தனைக்கும் நிரந்தரமான பொருள் வருவாய் வேண்டும் என்பது அவருக்குத்தெரியாததல்ல. ஆயிரம் ஆயிரம் ரூபாய் வீதம் சமயப்பற்றுள்ள தனவந்தர்களிடம் நிதி திரட்டினார். சேர்ந்த நிதியை முதலீடு செய்து அதன் வட்டி வருமானத்தைக் கொண்டு மானிப்பாய்க் கோயிற்பற்று உள்ளடக்கிய ஐந்து ஊர்களிலும் சமயப்பணிகளை இயன்றளவு ஊக்குவிக்கத் தன் உடல், பொருள் ஆவியாவற்றையும் அர்ப்பணித்தார். அவர் ஒரு செயல் வீரன். நினைத்த கருமத்தை நிறைவேற்றி முடிக்கும் திறமைசாலி. அன்பினாலும், பண்பினாலும், சகலரையுந் தன்பக்கம் இழுக்கும் சாதுரியம் அவரிடம் நிறைய உண்டு. கண்ணியம், கட்டுப்பாடு, நிர்வாகத்திறமை ஆகிய நற்குணங்கள் அவருக்குத்துணை புரிந்தன. சட்டரீதியாக ஒரு தருமசாதனம் பிறப்பித்து அதன் கோட்பாடுகளுக்கு அமைய, ஒரு தருமகர்த்தாக்கள் சபையை நிறுவி அதற்குத்தானே தலைமைதாங்கிப் பணிகளெல்லாம் முட்டின்றிச்செயற்பட ஆவன செய்தார். தன் பிள்ளைகளுக்கும் உற்றார் உறவினர்களுக்கும் தன் கடமையை நிறைவேற்ற சொத்துக்களை அளவாகக்கொடுத்து, எஞ்சியதைக்கொண்டு ஒரு அனாதைப் பிள்ளைகளில்லம் நிறுவவேண்டும் என அவரின் இயல்பான தருமசிந்தனை அவரின் வயோதிப காலத்தில் அவரை முன்குறித்த தருமகர்த்தாக்கள் சபையுடன் கலந்து ஆலோசித்து அவர்களின் உத்தரவுடன் 100 சிறார்களுக்கு வாழ்வளிக்கக்கூடிய ஒருபெரிய இல்லத்தை மூன்று மாச காலத்துக்குள் திடீர்திடீரெனத் தயார் செய்து 1986-ம் ஆண்டுத் தைப்பூசத் திருநாளன்று திறப்பு விழாவும் நடத்தி, தருமகர்த்தாக்கள் சபையில் ஒப்படைத்துவிட்டுச் சென்று படுத்துவிட்டார். பின் எழும்பவில்லை. அவரின் கடைசிமூச்சு வரையும் முதலியார் மகேசன் பன்னிப்பன்னிப் பேசினயாவும் "மகேஸ்வர இல்லம்" என்னும் அனாதைப்பிள்ளைகள் இல்லத்தைப்பற்றியனவேதான். மானிப்பாய்க் கோயிற்பற்றுக் கலங்கரை விளக்கம் சரிந்துவிட்டது. கோயிற்பற்று மக்களின் தவக்குறைவினாலே விளக்கு அணைந்துவிட்டது.

முதலியார் மகேசன் ஒரு ஒப்பற்ற தருமவான். தருமதேவன் அவரை அழைத்துச்சென்று வானுலகில் ஒப்படைப்பான் என்பது திண்ணம். எங்களுடைய நற்சாட்சிப்பத்திரங்கள் அவருக்குத் தேவைப்படா. அவர்-மன்பதைக்காற்றிய அளப்பருந் தொண்டுகளுக்கு எம் நன்றியுரித்துடையதாகுக. தருமம் தழைக்க வாழையடிவாழையாக, தருமசீலர் உதயமாகவெனப் பிரார்த்திப்போம்.

— மு. வைரமுத்து J. P.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் சேவையே மகேசன் சேவை என்று வாழ்ந்த மகான் முதலியார் மகேசன்

மானிப்பாயில் உள்ள நவாலியூரிலே மாண்புமிகு முதலியார் திரு. வயித்திலிங்கம் மகேசன் அவர்கள் பிறந்தார். இவர் நற்குணம், நல்லொழுக்கம், நற்சிந்தனை உள்ளவர். இறைவழிபாட்டிலும் மிக நம்பிக்கை உள்ளவர்.

இவர் கல்வியைக் கசடறக் கற்றவர். ''கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக'' என்ற பொய்யாமொழிக்கு இலக்கணமாக நடந்தவர். கட்டிடக் கலையிலும் பக்குவப்பட்டவர். இவருடைய தலைமையில் அரசாங்கக் கட்டிடங்கள், வங்கிகள் போன்ற பாரிய கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டன. இக் கட்டிடங்களின் பெறுபேறினால் பல விற்பன்னர்களால் மதிக்கப்பட்டு வந்தவர்.

இவர் யாழ்ப்பாணத்தில் உள்ள வயித்திலிங்கம் அன் கம்பனியின் இயக்குநரும் ஆவார். இவருடைய நிர்வாகத் திறமையால் இந்த ஸ்தாபம் ஒரு பிரபல்யமான ஸ்தாபனமாகத் திகழ்கின்றது. இவ் ஸ்தாபனத்தை தெரியாதவர்கள் இல்லை. இந் நிலைக்குக் கொண்டு வந்த பெருமையும் முதலியார் திரு. மகேசன் அவர்களையே சாரும்.

இவர் பொதுநல சேவைகளிலும் மிகவும் ஈடுபாடு உடையவராக இருந்து வந்தார். மானிப்பாய் கிராம சபைக்கு தலைவராய் இருந்து பெரும் பணி செய்து பட்டினசபை அந்தஸ்திற்கு உயர்த்தியவர். கூட்டுறவு ஸ்தாபகரான அமரர் திரு. வீரசிங்கம் அவர்களோடு தோளோடு தோள் நின்று கூட்டுறவு வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர். இவருடைய திறமையைக் கவனித்த அமரர் திரு. வீரசிங்கம் அவர்கள் மானிப்பாய் பரிஸ் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக நியமித்தார். இந் நியமன காலத்தில் தனது சேவையின் மேம்பாட்டால் மானிப்பாய் கூட்டுறவு சங்கத்தை மானிப்பாய் பரிஸ் பல. நோ. கூட்டுறவு சங்கத்தின் அந்தஸ்திற்கு உயர்த்தியவர் இவரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவழிபாடு இவருக்கு இன்றியமையாததொன்று. எனவே மானிப்பாய் மருதடி விநாயகர் கோயில், அட்டகிரி முருகன் கோயில், சிவன் கோயில், ஞான வைரவர் கோயில் இன்னும் பல கோயில்களின் வேலைகளைச் செய்வித்து கும்பாபிஷேகம் மண்டலாபிஷேகம், சங்காபிஷேகம் போன்ற விழாக்களை நடத்தியவர். ஆலய திருப்பணிகளுக்கு எவர் கேட்டாலும் தன்னால் இயன்ற பொருள் உதவிகளை முக மலர்ச்சியுடன் வழங்குபவர். அத்துடன் தனது கட்டிடக்கலை அறிவையும் அவர்களுக்கு உதவினார். அத்துடன் நில்லாமல், தானே நாள் தோறும் சென்று மேற்பார்வை செய்வார்.

மானிப்பாய் இந்து சமய விருத்திச் சங்கத்திற்கு திரு. எம். வயிரமுத்துவுடன் சங்கத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செலுத்தினார். பின்பு அச் சங்கத்தின் தலைவராய் வந்து கூடுதல் நிதியை வசூலித்து அந்த நிதியை வைப்புப் பணத்திலிட்டு பல கிளைச்சங்கங்களை ஸ்தாபித்து சைவப் பணியை வளர்த்தவர். இவர் "இறந்தும் இறவாதவர்கள்" வரிசையில் உள்ளவர். இவர் வையத்தில் இருக்க வேண்டியவர். ஆனால் விதி விடவில்லை. அமரத்துவம் எய்தி விட்டார். இவருடைய மறைவு பொது ஸ்தாபனங்களுக்கும், சைவ மக்களுக்கும், நலோரன்ன சகலருக்கும் பேரிழப்பாகும். இவருடைய மறைவால் தாங்கொணாத் துயரத்தில் இருக்கும் அன்னாருடைய குடும்பத் தவர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

— அ. நாகராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்மயோகி

தூய உடை, சிரித்த முகம், இறை பக்தி நிறைந்த நெஞ்சம், சினம் அறியாத சிறப்பு, இன்னல் விளைவிக்காத மனப்பான்மை, தளராது உதவும்கரங்கள், கடமையில் கண், சமூக சேவையில் அளவிலாத நாட்டம் — இத்தனையும் ஒருங்கிணைந்த மனித உருவமே, நான் அறிந்த முதலியார் மகேசன். அவர்போல் எல்லோரின் நெஞ்சிலும் வாழ்ந்தவர்கள் ஒருசிலரே. அன்னாரின் மறைவு அவருடன் தொடர்புகொண்ட யாவரையும் ஆற்ருெணுத் துயரத்துள் ஆழ்த்தியுள்ளது — பண்புடையார் தொடர்பை இலகுவில் மறப்பது கடினம்.

படாடோபம் என்பதை ஒருபோதும் நாம் அவரிடம் கண்டதில்லை ..... வார்த்தைகளை வீணுக்காது அளந்து பேசும் பண்பு, அவருக்கே உரியதொன்று. எவரையும் தாக்கிப் புண்படுத்திப் பேசியதை ஒருவரும் கண்டிருக்கமுடியாது.

சமூக, சமய ஸ்தாபனங்களில் பதவி வகிப்பதை மக்களுக்குச் சேவை செய்ய ஒரு வாய்ப்பாகக் கருதினுரேயன்றி, அதனுல் பெருமையடையலாம் என ஒருபோதும் எண்ணவில்லை — பொறுப்புணர்ச்சியும் சான்ருண்மைக்குரிய அருங்குணங்களும், ஒருங்கமைந்த சான்ருேனுகவே வாழ்ந்தார் — அமரராஞர்.

சிக்கல் எது வருகினும் அதன் அடிப்படையை ஆராய்ந்து, அவற்றுக்குத் தீர்வு காண நெறிமுறையினையும் வகுத்து திருத்தும் ஆற்றல் அவரிடம் நிறைய இருந்தது. அஃதொன்றே அவர் செய்த சாதனைக்கெல்லாம் ஊற்றுக்கண். அதிலும் யார் மனமும் நோகாது மற்றவர்கள் பழிப்பையும் ஏற்று கருமமே கண்ணுய் இருந்து, மாற்ருரும் வியக்கும் வண்ணம் எடுத்த கருமத்தை நிறைவேற்றுதல் மிகவும் போற்றக்கூடிய செயல், இவற்றை நடைமுறையில் செயல்படுத்தி வெற்றியும் கண்டவர் முதலியார்.

அன்னுரும், அன்னுரின் குடும்பத்தினர் யாவரும் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலேயே தங்கள் கல்வியை முழுவதும் முடித்ததிற்கு காரணம், அவர்களுக்கு இந்துக் கல்லூரியிலுள்ள பற்றும் அபிமானமுமாகும். பழைய மாணவர் சங்கத்தில் அவர் காட்டிய ஊக்கத்தின் காரணமாக நான் அதிபராக இருந்த காலத்தில், எனது வேண்டுகோளுக்கு இணங்கி, பெரும் தொகையை தன் முதலாக விட்டு, வருடக்கணக்கில் அதை அரசாங்கத்திடமிருந்து திரும்பிப் பெற காத்திருந்து, இரண்டு மாடி கட்டிடத்தை சிறப்பாக, பலர் மெச்சத்தக்கதாக பூர்த்தி செய்து கொடுத்தமைக்கு கல்லூரி என்றென்றும் கடமைப்பட்டுள்ளது. அவர் மறைந்தாலும், அவர் கட்டியெழுப்பிய யாழ். செயலகமும், தாதிகள் விடுதியும், தபால் கந்தோரும், மானிப்பாய் இந்துக் கல்லூரியி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுள்ள இரண்டு மாடிக் கட்டிடமும் என்றென்றும் அவரை மக்களுக்கு ஞாபகப்படுத்திக்கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

உயர்ந்த இலட்சியங்களையும், சிந்தனைத் தெளிவையும், செயலாற்றும் திறனையும் பெற்றிருந்த முதலியார், தன் வாழ்க்கையில் சந்தித்த இடர்கள், பிரச்சனைகள் பல அவற்றையெல்லாம் புன்னகையுடன் எதிர்கொண்டு வெற்றி கண்டாரெனில் அதன் இரகசியம் அவர் தம் வாழ்விற் கைக்கொண்ட அமைதி நிறைந்த, தூய்மையான இறை பக்தியேயாகும். "கருமம் செய்; பலனை பகவானுக்கே விட்டுவிடு" என்ற கர்மயோகத் தத்துவமே அவர் வாழ்வு — அவர் வெற்றி.

அன்னாரின் பண்புக்கும், தகைமைக்கும், என்னிடம் அவர் காட்டிய அன்புக்கும், என் அஞ்சலியுடன் இதனை அர்ப்பணிக்கிறேன்.

S. T. சாரி,
( S. T. SARI )
முன்னாள் அதிபர் மானிப்பாய் இந்துக்கல்லூரி

---

# மகேசனே நின்சீர் ஆன்மா உமையாள்பாகன் ஒளிக் கழல் சுகித்து வாழி!

தருகலைச் செல்வமெல்லாம் தங்கிய நவாலி யூரில்
வருசிவ மாண்பு பூத்த வடிவனே மகேச னென்னும்
திருவளர் பெயருக்கேற்ற சிந்தனைத் தேன் மணத்தால்
அருளொடு சைவம் பேணும் அன்புயர் மனத்தினனே.

எத்தனை செல்வ வாழ்க்கை இதந்தர அமைந்த போதும்
அத்தனை மறவா நெஞ்சும் அடியவர் தம்மைக் காக்கும்
பத்தியும் பரமன் பூசைப் பான்மையும் தாங்கி நின்று
முத்தியின் பயனைக் கண்ட முதல்வனே கொடைவல்லானே,

மக்களும் மனைவியும்நன் மருகரும் பேரர்தாமும்
மிக்கசீர்ச் சுற்றத்தாரும் விரவிய நண்பர் யாரும்
ஒக்கஇப் பவத்தில் வாய்த்த உதவியென் றிருந்தபோதும்
நக்கனின் பாதமொன்றே நற்கதியென்று வாழ்ந்தாய்.

தருமமும் தவமும் சேர்ந்த தண்ணருள் வாழ்வு பூண்டு
மருவிய சிவன்தாள்பெற்ற மகேசனே நின்சீர் ஆன்மா
தருவளர் வானோர் கூட்டம் தழுவிய சுகம் பொருந்தி
உருவளர் உமையாள் பாகன் ஒளிர்கழல் சுகித்து வாழி;

— அருட் கவி சீ. விநாசித்தம்பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவாலி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும், வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவருமான லயன் W. N. தேவகடாட்சம் அவர்கள் வழங்கிய

# நினைவாஞ்சலி

அமரர் முதலியார் வை. மகேசன் J. P. அவர்கள் நினைவுகள் என்றும் என் நெஞ்சில் மிகப் பசுமையாக இருக்கும்.

''இறைவனிடமிருந்து உன்னதமானவற்றை எதிர்பார், இறைவனுக்காக உன்னதமானவற்றை எத்தனி'' என்று இறையியல் மேதை உவில்லியம் ஹேரி கூறிய வாக்கை அமரர் முதலியார் மகேசன் அவர்கள் தனது குறிக்கோளாகக் கொண்டு தன் வாழ்க்கை ஓட்டத்தை ஓடி முடித்தார். ஐம்பதாம் ஆண்டுகளில் 450 சனசமூக நிலையங்களைக் கொண்ட யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசத்தில் முதலியார் கௌரவ பொருளாளராக அதாவது சமாசத்தின் பெட்டகமாக இருந்து சீரிய கடமையாற்றிய போது நான் சமாசத்தின் உப செயலாளராகவும் இருந்தேன். அப்போது தொடங்கிய எங்கள் நட்பும், பழக்கமும் அவர் அமரராகும் வரை வளர்ந்து தொடர்ந்தது, முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தில் அவரது பண்பை, அவரது சேவையை, அவரது கண்ணியத்தை வியந்து மனதில் நான் புகழ்ந்து போற்ருத நாள் கிடையாது.

மூக்குக் கண்ணுடியுடன் மடித்த பட்டுச்சால்வையுடனுன புனித உடையுடன், சிரித்த முகமும், இனிய சொற்களுமே அவரது சொத்துக்கள். மாற்ருனையும் கனிய வைக்கும் விதத்தில் கண்ணியமாகப் பேசுவதில் அவர் சமர்த்தர்.

''இன்னு செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்துவிடல்'' என்ற திருக்குறளின் இலக்கணம் அவர் செய்கைகளில் இலக்கியமானது. அவர் எங்கள் ஊரின் பிதாவாக அமைந்தார். ஒருவர் செய்த பிழையை மறப்பது மட்டுமன்றித் தான் செய்த நன்மையையும் இரண்டாம் பேர் அறியாமல் அவர் மறந்துவிடுவார்.

அவர் ஆற்றிய பொதுப்பணிகள் அளப்பரியன. அவற்றைப் பட்டியல் போடுவதானுல் அதுவே ஒரு தனிக் கட்டுரையாக அமையும். மானிப்பாய் கிராமசபைத் தலைவராக அவர் பணியாற்றிய காலத்தில் நவாலி ஐக்கிய கழக கிராமமுன்னேற்றச் சங்கம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவாலி தெற்கு சனசமூக நிலையம் என்பவற்றின் கௌரவ செயலாளராக இருந்து அவ ருடன் பல சேவைகள் செய்யத் தருணம் கிடைத்தது. அவர் ஆற்றிய இரு பெரும் பணிகள் என்றும் மறக்கமுடியாதவை. அவரின் விடா முயற்சியால் கிராமங்களுக்கு முதல் முதல் மின்சார ஒளி விநியோகம் தொடங்கப்பட்டதால் இல்லங்களும், கோவில் களும், வீதிகளும், ஒழுங்கைகளும் ஒளிபெற்றன. அவர் காலத்தில் குடியிருப்புப் பிரச் சனை தீவிரமடையவில்லை. எனினும் அத்தகைய பிரச்சினை தோன்றும் என்ற தீர்க்க தரிசனத்துடன் நவாலியில் கல்லுண்டாய்ப் பகுதியில் ஏற்ற வசதிகள் கொண்ட வீட மைப்புத் திட்டம் ஒன்றை அமரர் உருவாக்கி அதனைக் கண்டு பூரித்தார். இன்று அதன் பயனைப் பலரும் அனுபவிக்கின்றனர். வீடற்றோர் வீட்டுச் சொந்தக்காரராய் உள்ளனர். ஒரு புதிய குடியிருப்புத் தோன்றியது. நன்றியுள்ள மக்களும் கிராமசபையும் அதற்கு, 'முதலியார் மகேசன் சதுக்கம்' (Mudaliyar Mahesan Square) என்று நாமஞ் சூட்டினர். பொருத்தமான பெயரே. அமரர் நாமத்தை அழியாது அது எப்போதும் கூறும். கிராம சபை மூலம் நடாத்திய சுகாதார விழாக்களைத் திட்டம்போட்டு மக்கள் விழாவாக நடாத்தி முடித்து நன்மை பல பெறச் செய்த செயல் வீரன். சங்கங்கள், பாடசாலைகள் மூலம் போட்டிகள் பலவற்றை ஒரு மாத காலத்துக்கு நடாத்தி பரிசுகள் வழங்கி உற் சாகமூட்டினர். சனசமூக நிலையங்களுக்கு வாசிகசாலைகளை அமைப்பித்தார். யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசம் சமூக, கலை, கலாச்சாரப் பணிகள் ஆற்றிய ஒரு பெரும் அமைப்பு. அதன் பணிகள் வரலாற்றில் இடம்பெற்றுள்ளன. அமரர் இராசவாயில் முதலியார் சி. தியாகராசா, முகாந்திரம் இ. பி. இராசையா, அமரர் முதலியார் மகேசன், அமரர் விடிவெள்ளி க. பே. முத்தையா, திரு. த. துரைசிங்கம் ஆகியோருடன் நானும் அந்த அமைப்பின் பணிகளில் அதன் சாதனைகளில் பங்கு கொண்டதைப் பெருமையுடன் எண்ணிப்பார்க்கிறேன். அமரர் முதலியார் மகேசன் கௌரவ பொருளாளராக இருந்தபோது அவர் கடைப்பிடித்த ஒரு கொள்கையை நான் மறக்கமுடியாது. பொதுப்பணத்தில் ஒரு சதமேனும் வீணாகச் செலவு செய்ய முற் படுவதற்கோ, ஆடம்பரச் செலவுகளுக்குப் போவதற்கோ அவர் இடமளிக்கமாட்டார், "எனது பணத்தை எப்படிவேண்டுமானாலும் செலவு செய்வேன், ஆனால் பொதுமக்கள் பணத்தில் ஒரு சதமேனும் வீண் போக இடமளிக்கமாட்டேன்" என்று அடிக்கடி சொல் லுவார்.

அமரர் அவர்கள் இலங்கைக் கயரோக நிவாரண தேசிய சங்க வலிகாமம் மேற் குக் கிளையில் (Valikamam West Branch of the C N A P T) உபதலைவராகவும், இப்போ இறுதிவரை போஷகராகவும் கடமையாற்றினர். இக் கிளை இலங்கையின் மிகச் சிறந்த கிளைகளுள் ஒன்று. தாய்ச்சங்கத் தாபகர் Dr. J. H. F. ஜெயசூரியா அவர் கள் எழுதிய கயரோக நூலில் இக் கிளைச் சங்கத்தைப்பற்றி எழுதியதுடன், பத்தாண்டு நிறைவு விழாவை மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடாத்தியபோது டாக்டர் ஜெய சூரியா, திரு. எல்லப்பொல, திரு, கலுகல என்போர் அமரர் முதலியாரின் கொடைத் திறமைகளையிட்டுப் பகிரங்க கூட்டத்தில் பல உதாரணங்களுடன் கூறினர்,

அமரர் நவாலி கிராம முன்னேற்றச் சங்கம், நவாலி சனசமூக நிலையம் என்பவற் றின் தலைவராக இருந்து பரந்துபட்ட சேவைகளைச் செய்தார். பலருக்கு விழாக்கள் எடுத்துக் கௌரவித்தார். 1965இல் இலங்கை வானொலிக் கொமிஷனுக்கு தூதுக் குழு வில் தலைமைதாங்கி நவாலியின் கொடியை நாட்டினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக மாமேதை பேனுட்சோ, "நான் தான் வாழவேண்டுமென்று நினைப்பவன் கால் மனிதன். நான் வாழவேண்டுமென்று நினைப்பவன் அரை மனிதன், நானும் வாழ வேண்டுமென்று நினைப்பவன் முழு மனிதன்" என்று கூறினர். ஆம்; நானும் வாழ வேண்டுமென்று நினைத்து பூரண முழு மனிதனுக வாழ்ந்தவர் அமரர் மகேசன் அவர்கள். இவரது பெயர் முதலெழுத்துக்கள் V. M. என்பதே. உண்மைக் கருத்து உடனேயே வைக்கப்பட்டுள்ளது. V — Victory M — Man, வெற்றி மனிதனுக சீவித்தார். நவாலி சிறந்த மனிதனை இழந்துவிட்டது.

நவாலியின் முதன் முதல் சமாதான நீதவானுகக் கடமையாற்றும் வாய்ப்பும் அமரருக்கே கிடைத்தது, பலருக்கு இது மிகுந்த பயனையும் உதவியையும் அளித்தது. இவர் ஓர் மணிமண்டபத்தை அமைத்து எம் மக்களுக்குப் பல் விதத்திலும் நன்மை பெற வழிவகுத்தார்.

அவரது அரிய சேவையின் ஞாபக சிகரமாக கிராமசபையில் அங்கத்தவராக நான் இருந்தபோது முதலியார் மகேசன் சதுக்கம், முதலியார் மகேசன் வீதி என்னும் ஞாபக சின்னங்களைச் சூட்டக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

எல்லாப் பணிகளுக்கும் சிகரமாக அவர் தோற்றுவித்த "மகேஸ்வர இல்லம்" எல்லா உயிரிலும் இறைவன் உண்டு என்ற உன்னதக் கொள்கையின் அடிப்படையில் அனுதைச் சிறுவர்களுக்காக அமைக்கப்பட்ட ஆதுலர் சாலையே மகேஸ்வர இல்லம்; அதற்கான நிதி அனைத்தும் அவரது கொடைகள். அதன் வளர்ச்சியைக் காண அமரர் இல்லையே என்பதை நினைக்க நெஞ்சில் கண்ணீர் வெள்ளம் பெருகுகிறது. ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்ற கருத்துக்கு உயிரூட்டியவர் அமரர் அவர்களே, ஒரு பூரண வாழ்க்கை வாழ்ந்த பெரியார் அவர். நோயுற்ற காலத்திலும் பெரும் பணிகளில் கலந்துகொண்ட அவர் மன வைராக்கியம் வியக்கத்தக்கது.

அமரர் முதலியார் மகேசன் பற்றுள்ள நண்பர். பண்பான உபசரிப்பால், பழக இனிய குணத்தாலும் நெஞ்சில் நிறைந்தவர். அவர் புகழை நாடியதில்லை. எக் கருமத்தையும் தனது தகுதிக்குக் குறைந்ததொன்று என ஒதுக்கவில்லை, பொதுமக்களுக்கு நன்மை கிடைக்கும் எக் காரியத்தையும் அவர் செய்யப் பின் நிற்கவில்லை.

அவர் பிரிவால் துயருறும் அவரது அன்புக் குடும்பத்தினருக்கும், அவரது தொழில் தாபன ஊழியருக்கும், மற்றையோருக்கும் ஆறுதல் கூறுவதுடன், ஒரு ஒப்பற்ற மனிதனின் வாரிசுகள் நீங்கள் என்று சொல்லிக்கொள்ளவும் விரும்புகிறேன். நவாலி முடிசூடா மன்னன் அமரர் மகேசன் அவர்களின் ஆத்மா இறைவனது திருவடியில் என்றும் பிரகாசித்துக்கொண்டிருக்கும்......

எனவே, அவரின் ஆத்மசாந்திக்காகப் போற்றி அஞ்சலிப்பது நம் கடனுகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
திருச்சிற்றம்பலம்

# மனக் கவலை சற்றும் அற்ற எங்கள்

# முதலியார் மகேசன் ஐயா

மனிதன் இவ்வுலகில் பிறப்பதும் இறப்பதும் இறைவன் நியதி. ஆனால் இறக்கும்போதும் இன்பமாக இனிய புன்னகையுடன் தன் குடும்பத்தாருடன் பேசி மகிழ்ந்து இறையடி எய்துவேன் எனத் தெரிந்துகொண்டும், தன் நன் மக்கட் பேற்றாலும், குறைவில்லாச் செல்வத்தாலும் இன்னும் மேலாகச் சிந்தாமணிப் பிள்ளையார் தனக்குச் சகல திருவருளையும் நவாலிப் பதியிலிருந்து சொரிந்துள்ளார் எனும் அசையா நம்பிக்கை கொண்ட மனப்பூரிப்புடன் இன்னுயிர் நீத்தே இறைவனடியும் எய்தினார் எங்கள் முதலியார் மகேசன் ஐயா. எமக்கும் இவ்வகையான பெறற்கரிய பேறு இறையடி எய்தக் கிடைக்குமா என்பதுதான் எம் வாழ்வில் பெரும் கேள்வி அடையாளம். ஐயா அவர்கள் ஆத்மா சாந்தி அடையஅவர் தம் இனிய குடும்பத்தாருடன் இணைந்து நாமும் பிரார்த்திப்போமாக.

தன் இனத்தைப்பற்றிய கவலையும் தமிழன்னை தன் இன்றைய துன்பகர நிலை மட்டும்தான் ஐயா அவர்கள் துன்பம் இறுதி நேரத்திலும் இருந்திருக்கும் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை. இவ்வகையான உத்தமர்க்கு என் கவிகள் சிலவும் சமர்ப்பணம்.

எனக்கினியார் ஒருவர் இவ்வுலகை நீத்தார்
தனக்கினியான் அல்லன் பிறர்க்கே இனியான்
மனக்கவலை சற்றுமற்ற முதலியார் மகேசன்
இனக்கவலை ஒன்றே இறுதிப் பெரும் துன்பம்

சீர்பெருகு திருசேர் நவாலிப் பதிமேவு பிள்ளையார்
பேர் புகழச் சிந்தாமணிப் பிள்ளையார் என வழைப்பர்
சோர்வேது மில்லாத முதலியார் மகேசனையா அவர்தாசன்
பார்புகழ இறையடி எய்தினன் என்செய்வோம் நாம்.

யார்தாள் பெறுவர் இப்பெரும் பேறு வாழ்வில்
தார்மீகச் சிந்தனைச் சிற்பிமுதலியார் மகேசன்
பார் புகழப்பெற்ற நல்லில்லற மங்கையர்
சோர்வுறவே சொக்கனடி சேர்ந்தார் இனிதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்ன நன்மங்கையர் பொன்மணி இராசமணி
நன் மக்களாய்ப் பெற்றனர் அறுவர் அவருளே
முன்னவள் பெற்றனள் ஐவராம் இவருளே
மன்னவரடி சேர்ந்தனள் நங்கை மங்களாம்பிகை.

எண்திசையும் போற்றிடவே இறைமகனாய் கணேசனும்
பண்புடைத் தொழிலதிபதியாய் பெயரீட்டிட உதித்தே
கண்போல் தம்பியர் நடேசன் புவனேந்திரனும் நன்றே
பண்பால் உயர் மகேசன் நன் மக்களாய்ப் பிறந்தனரே.

வேலக்கைப் பிள்ளைமுருகன் துணையால் வேதிகர் போற்ற
சீலச் சிறப்புடன் சிறப்புறப் பிறந்தனன் திருசேர் செல்வி
கோலமாமயில் என லலிதாம்பிகை செல்வ மகளாய்
பாலக்குமரன் வரமிதுவே ஐயா மகேசன் பெற்றபெரும் பேறே.

எல்லோரும் இறப்பதற்கே பிறந்தோம் என்பார்
நல்லாய் வேலக்கை முருகனை வணங்கிநில் என்பார்
பல்லோரும் போற்றிட இன்று பரகதி அடைந்தார் மகேசன்
நல்லோன் நாமம் என்றும் நிலைநிற்கும் நன்றேதான்.

அன்பான பின் மகனார் வரதராஜனும் சேர்ந்தனன்
தென்பால்நோக்கி நடமிடும் இறைவன் பாதமே
என்பார் ஐயா இனியென் செய்வோம் என்றும்
தன்வாழ்வும் இதுதான் எனத் துணிந்து நின்றார்.

திருச்சிற்றம்பலம்

—வேலணை வேணியன்
( வை. கங்கைவேணியன் )

ரில்லீஸ் குரூப்,
324, ஸ்ரீ சங்கராஜமாவத்தை,
கொழும்பு—10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A TRIBUTE

*to*

## The late Mudaliar V. Mahesan, J. P.

*from*

**Muhandiram Dr. E. P. Rasiah, J. P.**

( Commander of the Order of St. John )

The late Mudaliar V. Mahesan born 76 years ago passed away last month at a Nursing Home in Colombo peacefully and painlessly surrounded by his kith and kin. The curtain has fallen; stilled now was that deep compassionate voice; closed for ever are those wise winsome eyes. It is said that, at such a time -

" On some fond breast, the parting soul relies
Some pious drops the closing eye requires "

These, have I endeavoured to supply with these artless, but affectionate lines.

### Birth

Mudaliar born into life in the lap of luxury and opulence lived discarding ease and comfort. He was warm-hearted. frank and forth-right in dealings with his friends and associates. His word was as sound as a bond and he never failed a friend. He was a man of many parts an all-rounder — a successful business magnate, a sincere social-worker and a capable Organiser.

### Community Centres' Union

I came into close contact with him when the late Gate Mudaliyar C. Thiagarajah organised the J. Dt. Community Centres' Union and Mudaliar Mahesan consented to serve as Vice-Chairman. I had to serve as Hony. Secretary. The trio thought alike, planned alike and acted alike and the Union became a strong, virile respected Organisation. Lord Soulbury, then Governor-General, honoured it by attending year after year its Annual Celebrations.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Co-op Union**

Mudaliar Mahesan's name was up as a smart Organiser and so he was offered the President ship of the N. D. A. P. C. Union. Within a short time, Mudaliar Mahesan transformed it to be a top-ranking Co-op Organisation. I was his under-study and he proved to me a tower of strength in all my under-takings. In short, he became " My Guide, philosopher and Friend "

**Man**

He had talked with crowds and yet kept his virtues. He had moved with kings, but ne'er lost the common touch, He was a dependable, practical man methodical in his ways and systematic in his actions. He had a genial winsome smile, which invited confidence and friendship. He was known to greet friend and foe ( if any ) with a ringing hearty laugh. Possessed of charming and cheerful manners, he puts even a stranger at ease with his re-assuring words. He had a guileless heart and expected frank and straight dealing from all.

His concern to the sick and suffering, his service to the needy and helpless, his words of solace to the dejected and forelorn endeared him to all.

**Over-work**

He had forced his heart nerve and sinew to serve their turn long after they had gone. He had filled the unforgiving minute with sixty seconds' worth of distance run This hastened his end.

" The lifes of great men all remind us
That we can make our lives sublime
And departing leave behind us
Foot-prints on the sands of time. "

**Re-birth**

As a Hindu, believing in the theory of Re-birth, will I be wrong if I say that the Soul, whom we knew as Mudaliar Mahesan will live on, — may be as a purified Soul — projected to life in a distant plane or may be, that the wave-length has already vitalised som human conception somewhere to be re-born in due course as a nobler soul in some part of this wide World to do greater good to mankind.

**Om Shanthi! Shanthi !! Shanthi !!!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# செயற்றிறங்கள் வல்லான் மகேசன்

எல்லார்க்கு மொவ்வொன் றெளிதென்ற அவ்வை விதப்பினிமேற்
செல்லா தெனும்நிலை சாதித்த செம்மல் செயற்றிறங்கள்
வல்லான் மஹேசன் மதிவணங் கைவனம் மாண்புறப்பட்
டில்லா தனவில்லை யாய்த்திந் நவாலியும் மானியுமே.

— கட்டளைக்கலித்துறை.

'யாம் பெரிதும் — வல்லோமே யென்று வலிமைசொல வேண்டாங்காண் — எல்லார்க்கு மொவ்வொன் றெளிது' என்பது ஔவை பாடல். அமரர் மகேசனும் 'யான் எல்லாம் வல்லேன்' என்றெண்ணியதாயுமில்லை; சொல்லியதாயுமில்லை. அது அவருடைய தணிந்த நடையாலும் பணிந்த மொழியாலும் பிரதிபலிக்கக் கூடியதாயிருந்தது உண்மை. ஆனால், தொழில் நுட்பக் கலைத்திறன்கள் மட்டுமல்ல, ஓவியம், சிற்பம் இசை முதலாம் நுண்கலைத்திறன்களும் — எல்லாம் தமக்கெளிது என்ற நிலையை அவர் தோற்றுவித்திருப்பதும் பகிரங்க இரகசியம்.

ஒருதினம், காலைவேளை, சுய இல்லத்து வெளிவிருந்தையின் ஒரு அந்தத்தில் ஒரு காட்சி, சிற்பியொருவர் சிமிந்திச்சாந்தினால் ஆறுமுக சுவாமி சிற்பம் ஒன்று அமைப்பதில் ஈடுபட்டிருக்கிறார். முன்முகம் மூன்றில் நடுமுகம் உருவாகி வருகிறது. கண் புருவம், வாயிதழ் சரிசெய்யப்படுங் கட்டம். சற்றுத் தூரத்தில் நின்று அவதானித்துக்கொண்டிருந்த திரு. மகேசன் சட்டென அதை அணுகுகிறார். சிமிந்திக் கரண்டியைத் தன் கையில் வாங்கிக் கொள்கிறார். ஒரு சில நிமிஷங்கள் சுவாரஸ்யமாக ஏதேதோ செய்கிறார். முடிவில், சிற்பியின் முகத்தை நோக்கியபடி, 'இப்ப எப்படி?' என்கிறார் சிரிப்புடன் வணக்கமாகத் தலையசைக்கிறார் சிற்பி. — இது கேட்ட செய்தியன்று, கண்ட செய்தி.

மத்தளத்துக் கொருவர் ஹார்மோனியத்துக்கொருவர் ஆக, இருவரை அமர்த்திக்கொண்டு, மஹேசன் தாமே கையில் தாளம் பிடித்தபடி சங்கீத கதாப்பிரசங்கம் — இது கேட்ட செய்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஹேசன் என்ற பதமே ( மஹா + ஈசன் ) பேராற்றலுள்ளவன் என்ற பொருளில் உள்ளது. சிவன் நிலைகளில் ஒன்றைக் குறிக்கும் மஹேசன் சமஸ்கிருத பதத்தைத் தனித்தமிழ்ப்பதமாக்குவோர் ' ஆற்றலோன் ' என்றே குறிப்பர். (மஹேசன் — ஆற்றலோன் சதாசிவன் — அருளோன் )

உலகில் ஆட்களின் பெயர்ப்பொருத்தமும் பிறப்புக்குமுன்னாகவுள்ள கன்மானு சாரமாகவே அமைகிறது என்னும் தத்துவஞானம். எல்லா ஆற்றலுங் கைவரும் பூர்வ புண்ணியம் இருந்த இவருக்கு மஹேசன் எனப் பெயர் வாய்த்ததில் நிரம்ப அர்த்தமுண்டு.

விஷேடமாக, நவாலி — மானிப்பாய் வளாகத்தில் உள்ள ஆலயங்கள், பள்ளிக் கூடங்கள், அறச்சாலைகள், சமய சமூக ஸ்தாபனங்கள் ஆகியவற்றில் மஹேசனின் மதிவண்ணமாகிய ஆலோசனையோ, கைவண்ணமாகிய செயற் சித்திரமோ அல்லது இரண்டுமோ இல்லாதன இல்லை ஆதல் பிரசித்தம். அவற்றுக்கிடமாயிருந்த அந்தப் பேராற்றல் தற்போது நம் கண்முன் நில்லாது நீங்கிவிட்டது. அதுவே இன்றைய முக்கியமான கவலை.

தம் மதிவண்ணங் கைவண்ணங்களைக் காரியப்படுத்துதற்குப் பிறர்கையை எதிர் பார்க்க வேண்டாத அளவுக்குச் செல்வக் கொடையும் அவருக்கு வாய்ந்திருந்தது மஹாவிஷேடமாகும்; அது போற்றத்தகும்.

அவர் நினைவகலா நெஞ்சங்கள் அவர்தம் மேல்கதிப்பேறு குறித்துப் பிரார்த்திக்க வேண்டுகின்றோம்.

சாந்தி ! சாந்தி ! ! சாந்தி ! ! !

— பண்டிதர் மு. கந்தையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலியார் வை. மகேசன்

## நிரப்ப முயன்றாலும் முடியாத வெற்றிடம்

முதலியார் வை. மகேசன் அவர்கள் நவாலியூரில் வாழ்ந்த ஓர் சைவப் பெரியார். தன் நலம் கருதா ஒரு பொதுநல சேவையாளராகவும், சீரான சிந்தனையாளராகவும், ஆற்றல்மிக்க செயல்வீரனாகவும். உற்றார் உறவினர் மதிக்கக்கூடிய குடும்பத் தலைவனாகவும், நாணயம் மிக்க தொழில் அதிபராகவும் சீருடனும் சிறப்புடனும் தெய்வ சிந்தனையுடனும் இவ்வுலக வாழ்க்கையில் மலர்ந்து எல்லோருடைய இதயகமலத்திலும் ஓர் நிர்ந்தர இடத்தைப் பிடித்தவர் என்றால் அது மிகையல்ல.

நான் அறிந்தளவில் அவரின் பூரண வாழ்க்கையை நாலு கூறுகளாகப் பிரிக்கலாம், பள்ளிக்கூடப் பருவத்தில் ஓர் சிறந்த மாணவனாகவும். விளையாட்டு வீரனாகவும் ஆசிரியர்களின் மனதைக் கவர்ந்தவராகவும் திகழ்ந்தார். தொழிலில் அமர்ந்தவுடன் கடமையைச் செவ்வனே செய்து ஊழியர்களின் நன் மதிப்பையும் பெற்றார். தனக்கென வாழாமல், தனது மத்தியில் வாழும் மக்கள் எல்லோரும் இன்புற்றிருப்பதுவேயல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே என்ற மூல மந்திரத்தை நினைவில் என்றும் உச்சரித்து வாழ்ந்த பெருந்தகை. உள்நாட்டு அரசியலில் புகுந்து மானிப்பாய்க் கோவிற்பற்று கிராமச் சங்கத்துக்கு அங்கத்தவராயும் பின்பு தலைவராயும் சேவையாற்றிய பெருமை இவருக்கு உண்டு. இந்தக் காலகட்டத்தைக் கடந்தவுடன் சமயத்தில் அக்கறைகொண்டு பல புராணபடலங்களையும், பஞ்சபுராணங்களையும் நாயன்மார்களின் சரித்திரத்தையும் தெளிவுறக் கற்று சங்கீதகதாப்பிரசங்கம் பல இடங்களிலும் செய்து அதன்மூலம் சமயத்தை வளர்த்தார்.

நாலாம் கட்டத்தில் அதாவது இறுதிக் காலத்தில் நேரடியாகச் சமயத் தொண்டில் ஈடுபட்டு கோவில்களைத் திருத்தியும் கோவில்களில் புனருத்தாரணம் செய்யும் வேளையில் கட்டிடங்களை மேற்பார்வை பார்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும் மானிப்பாய்க் கோவிற்பற்று இந்துசமய அபிவிருத்திச் சங்கத்துக்கு தலைவராக இருந்தும் அரும்பெரும் தொண்டாற்றினர். பண்ணிசை வகுப்புகள், சமய பாடப் பரீட்சை முதலியன நடத்தி, ஊக்குவிப்பதற்கு பரிசில்களும் வழங்கினர். நவராத்திரி விழா, திருவெம்பாவை விழா, நாயன்மார்களின் குருபூசை போன்றவைகளை முன்னின்று நடத்தி மகிழ்ந்தார். ஏழைகளுக்கு அன்னதானம் வழங்குவதில் தவறவில்லை. இறுதியாகச் செய்த சேவைகளுக்கு மகுடமாக ஓர் அநாதை இல்லத்தையும் தனது கட்டிடத்தில் ஸ்தாபித்து அதற்கு ஆகவேண்டிய பெலப்புக்களைத் தேடுவதில் ஈடுபட்டிருந்தார். அவரின் வாரிசுகள் மேலும் தொண்டாற்றவேண்டுமென்றும் அவர்கள் குடும்பங்கள் வாழவேண்டுமென்றும், அன்னாரின் ஆத்மா சாந்தியடையவேண்டுமென்றும் இறைவனை வழுத்துகின்றேன்.

ச. வ. இராசேந்திரன் *J. P.* சட்டத்தரணி
*(தலைவர், சைவபரிபாலன சபை)*

---

## அமரர் முதலியார் வை. மகேசன் அவர்களுக்கு

### நவாலி வளர்மதி சனசமூக நிலையத்தின்

# இதய அஞ்சலி

முன்னேற்றப் பாதையில் முன்னின்றுழைத்த எங்கள் மூத்த தமிழ் மகன் முதலியார் மகேசன் அவர்களின் மறைவுச் செய்தி மனதைக் கலங்க வைத்த மாபெரும் துயரச் செய்தியாகும். அன்னர் ஒரு சிறந்த சமூக சேவையாளர். ஏழை பங்காளன். 'மகேஸ்வர் இல்லம்' என்ற அனாதை இல்லத்தை அமைத்து அதற்கான கட்டிடங்களையும் மானிப்பாய் பிரதேச இந்துசமய விருத்திச் சபையிடம் கையளித்த அருங்கொடை வள்ளல். இந்துசமய அபிவிருத்திக்காக இரவு பகல் பாடுபட்ட சிவத்தொண்டன்.

வளர்ந்து வரும் எமது வளர்மதி சனசமூக நிலையத்திற்கு அரும் பெரும் உதவிகள் புரிந்த அன்பாளன். எமது இனிய தலைவனுக்கு வளர்மதி சனசமூக நிலையத்தினரின் கண்ணீர் கலந்த இதய அஞ்சலிகள்.

*நவாலி,*
*மானிப்பாய்,*

இவ்வண்ணம்,
*பிரிவால் துயருறும்*
நவாலி வளர்மதி சனசமூக நிலையத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னைத் தவிக்கவிட்டு எங்கு சென்றீர் சொல்லும் ஐயா?

வார்த்து எடுத்தது போன்ற முகம். அந்த முகத்தில் என்றுமே ஒளிவிடும் கண்கள். அமைதியான புன்னகை, அன்பு ததும்பும் பேச்சு. தூய உடை. இத்தனையும் ஒருங்கிணைந்த ஓர் உருவத்தை இற்றைக்கு ஏறக்குறைய இருபத்தி ஐந்து வருடங்களுக்கு முன் மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் ஆலய ஆறும் திருவிழாவில் கண்டேன். விசேட மேளவாத்தியங்களுடன் அலங்காரப் பூந் தண்டிகையில் வள்ளி தெய்வயானையுடன் முருகப்பெருமான் வீதி வலம் வர அதன் நடுவே அந்த உருவம் கையில் பன்னீர்ச் செம்புடன் நிற்கும்பொழுது பால முருகன் வருவதைப் போன்றதொரு காட்சி, அந்த உருவத்துக்கு கிட்ட நான் செல்ல, என் கையைப் பிடித்து சாமரையைத் தந்து அதை எப்படி வீசவேண்டுமென்று எனக்குச் சொல்லித்தந்தார் என்னையறியாமலே அவர் மீது ஒரு பாசம் எனக்கு எழுந்தது, அவர் யாரென்று விசாரித்த போது அவர்தான் வைத்தியலிங்கம் கொம்பனி பங்காளர் சமாதான நீதவான் முதலியார் மகேசன் என்று அறிந்தேன். இடையிடையே காரில் செல்லும் பொழுதும் வருடமொரு முறை வேலக்கைப் பிள்ளையார் ஆறும் திருவிழாவிலும் கண்டுகொள்வேன்.

அவருடைய இளைய மகன் (காலஞ்சென்ற) வரதராஜனுடன் ஒன்றாகப் படிக்கும் சந்தர்ப்பம் கிடைத்ததினால் நட்புக்கொள்ள நேரிட்டது. வருடங்கள் உருண்டோட 1973ஆம் ஆண்டு வைத்தியலிங்கம் கொம்பனியில் வேலை இருப்பதாக அறிந்த எனது மைத்துனர் என்னை அந்த வேலையில் சேர்க்கும்படி முதலியாரிடம் கேட்க, தான் நேரில் என்னைப் பார்க்கவேண்டும் என்னை நேரில் கூட்டிவருமாறு கூறினார். அதன்படி நான் அவருடைய இல்லத்துக்குச் செல்ல அன்பான வரவேற்பு, தேநீர் உபசாரம், அறிவுரை. அடுத்த நாள் வேலைக்கு வரும்படி கூறினார்.

தந்தையை இழந்திருந்த நான், அவருடன் பழகிய முதல் நாளே என்னை அறியாததோர் உணர்ச்சி சந்தோஷம், படிப்படியாக எனக்குப் பொறுப்பான உத்தியோகம். அவருடைய பிள்ளைகளுடன் வேலை செய்யும் பாக்கியமும் எனக்குக் கிடைத்தது. பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும் என்பதற்கேற்ப, நானும் அவருடன் செல்வதால் எனக்குப் பல பெரியார்களைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. நாங்கள் எல்லோரும் 'ஐயா' என்றே அழைப்போம், பிள்ளைகளும் கூடத்தான். அவருடன் கொம்பனியில் வேலை செய்யத் தொடங்கிய நாள் முதல் பல பொது விஷயங்களிலும், சமய சம்பந்தமான விஷயங்களிலும் ஈடுபட சந்தர்ப்பம் கிடைத்தது. காலஞ்சென்ற வரத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் நானும் பல பொதுப்பணிகளில் ஈடுபட வழி காட்டினுர். தன்னுடைய குடும்பத்தில் ஒருவராக என்னையும் நினைத்து அன்பு பாராட்டினுர். ஐயாவின் விருப்பங்களையும் நோக்கங்களையும் உடனுக்குடன் நிறைவேற்றி அவருடைய அன்பையும் பாராட்டையும் பெற்று அதில் ஒரு ஆனந்தத்தைக் கண்டேன்.

இப்படிச் சந்தோஷமாக இருக்கும் காலத்தில் அவர் சுகவீனமுற்று தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். சிகிச்சை பெற்றுவரும் காலத்தில் தனது கோயில் திருவிழாக்களைப் பற்றியும், குருபூசைகளைப் பற்றியும், மகேஸ்வர இல்லத்தைப் பற்றியுமான தனது ஆசைகளையும், கவலைகளையும் தெரிவித்தார். அவற்றைப் பற்றி ஒன்றும் யோசிக்கவேண்டாம். என்னுலானவக்றைச் செய்வேன் என்று வாக்குறுதி கொடுத்தேன், அட்டிடிக் கூறியதும் அவர் அடைந்த சந்தோஷத்தை முகத்தில் காணக்கூடியதாக இருந்தது. பின்னர வைத்தியத்துக்காக கொழும்புக்குச் செல்லும் போது மீண்டும் சுகமடைந்து திரும்புவார் என்று பூரண நம்பிக்கையுடன் வழி அனுப்பி வைத்தேன். ஆனுல் காலன் விடவில்லை.

ஐயா! என்னுடைய நம்பிக்கை வீணுகி இன்று உங்களை இழந்து தவிக்கின்றேன். தந்தையை நான் இழந்திருந்த காலத்தில் எனக்கு வாழ வழிகாட்டி என்னை நீங்கள் தந்தைபோல் ஆதரித்து வந்த உங்கள் பேரன்பை எப்படி மறப்பேன்.

அன்பு சொரிந்த உங்களை இழந்து தவிக்கும்

**கா. ஜெகதீசன்**

---

# என் கண்ணீர் அஞ்சலி

அன்பின், பண்பின் உறைவிடமே! அயராது உழைத்து உயர்ந்த பண்பினனே ஐயாவே; கந்தசாமி என அழைக்கும் எழிலோசை இழந்தேனே. இருபத்திரண்டு வருடங்களாய் உங்கள் திருப்பெயரைச் சுமந்த சிற்றூர்தியின் சாரதியாக விருந்தபோது ஐயா பல தடவைகளில் உங்கள் பாங்கான பணி செய்யும் பாக்கியம் எதுவென இயம்ப இது வொரு சந்தப்பமென உணர்ந்து உங்கள் திருவடிகளில் சமர்ப்பிக்கின்றேன்.

ஐயாவே! உங்கள் பவ்வியமான அறுபத்தி மூன்று நாயன்மார்களின் கதாப்பிரசங்கங்களைத் தொடர்ந்து நடாத்தி பல திருப்பணிகளில் தங்களை ஈடுசெய்தமையும் உதவி தேடி நாடி வந்த எவரையும் ஆதரித்து வழியனுப்பிவைத்தீர்.

இறைபணியில் அயராது உழைத்து வந்தவரே! உன் அரும் செயல்கள் அத்தனையும் சொல்வதற்கு அடியேன் அருகதையற்றேன்.

நான் கண்டுணர்ந்த சீரிய பண்புகளை இப் பிறவியில் காண்பேனோ வென ஏங்குகிறேன் ஐயாவே;

தங்கள் சீரிய பண்புகளை எடுத்துரைக்க முடியாமல் என் கண்களில் நீர் மல்கி, மனம் நெகிழ்ந்து கலங்குகிறேன் ஐயாவே! உங்கள் ஆத்துமா சாந்தியடையவே இறைபணி செய்தாயென எண்ணும்போது சாந்தி பெறுகிறேன். என்னை மறக்கிறேன்.

இதுவே நான் உங்களுக்களிக்கும் என் கண்ணீர் அஞ்சலி.

இங்ஙனம்

**க. கந்தசாமி (சாரதி)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலி

## எமது கண்ணீர் அஞ்சலி



அகம் நிறைந்து எழுந்திடும் அன்பினாலே
முகம் மலர்ந்து ஒளிர்ந்திடும் முதலியார் மகேசன்
ஐயா, நாம் இனிச் செய்வதை அறியோம்.
இல்லை என்கிற சொல்லையே அறியாப்
பொன்மனச் செல்வனே, எங்குநீ போயினை !
உமது பிரிவை எங்ஙனம் ஆற்றுவோம் ?

உமது பெருமைகள் உரையில் அடங்கா.
இந்து சமய விருத்திச் சங்கம்
தொடக்கி வைத்த தூயவன் நீயே.

மானிப் பாயின் கோயிற் பற்றுத்
தரும கர்த்தாச் சபையின் தலைவர் !

மகேஸ்வர அநாதை இல்லம் கண்ட
தயாநிதி அவர்களும்; தாங்களே ஐயா !

குழந்தைவேல் சுவாமிகோவில் மடத்தின்
தலைவரும் முதலியார் தாங்கள் தானே.

பொன்னார் மேனி, பொலிந்த புன்னகை,
இன்னார் இனியார் பார்க்காது எவர்க்கும்
அள்ளிக் கொடுத்திடும் அன்புக்கரங்கள்
செயல் இழந்தனவா ? செய்வதை அறியோம்.
உமது கொம்பனி ஊழியர் எங்களை
உமது பிள்ளைகள் எனவே காத்தாய்.
'கொம்பனி இயக்குநர்' என்பதை மறந்தோம்
குழந்தைகள் எமக்குத் தந்தையே ஆனாய்.
துதிப்புக்குரிய தூயவன் தங்களை
கல்நெஞ்சுடைய காலன் பிரித்தான்.
நெஞ்சைவிட் டகலா எம்பெருந் தலைவா !
அஞ்சலி இது ; எம் கண்ணீர் அஞ்சலி.

N. வைத்திலிங்கம் & கோ.
ஊழியர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கம் நிறுவி சைவம் வளர்த்த பெரியார்

முற்காலத்து முடிமன்னர் சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்தார்கள் என்பது வரலாறு. அதேபோன்று சங்கங்கள் நிறுவிச் சமயம் வளர்த்த பெரியார்களுள் தலை சிறந்தவர் அண்மையில் அமரத்துவமடைந்த முதலியார் வை. மகேசன் என்போமாயின் அது மிகையாகாது. முதலியாரென்று யாவராலும் அன்பாக அழைக்கப்படும் இப் பண்பாளரின் சைவப் பணிகள் விரிக்கிற் பெருகும். ஆகவே ஒரு சிலவற்றை மாத்திரம் இங்கு இயம்புவது ஏற்புடைத்தாகும்.

மானிப்பாயில் இயங்கி வந்த இந்துசமய விருத்திச் சங்கம் நிதிப்பற்றாக்குறைவால் நலிவுற்றபொழுது முதலியாரவர்கள் முன்வந்து மானிப்பாய் கோயிற்பற்றிலுள்ள சண்டிருப்பாய், சுதுமலை, ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய் ஆகிய ஐந்து ஊர்களிலும் ஐந்து சங்கங்கள் நிறுவியதுடன், அவை இணைந்து செயற்பட கோயிற்பற்றுச் சங்கத்தையும் அமைத்து, எதிர் காலத்தில் எவ்வித இடர்ப்பாடுமின்றி அவை செயற்பட தர்ம நிதியையும் அதனைப் பராபரிக்க தர்மகர்த்தா சபையையும் ஸ்தாபித்துள்ளார்கள். "செயற்கரிய செய்வர் பெரியர்" என்பதற்கு முதலியார் அவர்கள் தலைசிறந்த எடுத்துக் காட்டாகும்.

தாம் எடுத்த காரியத்தை அல்லும் பகலும் அநவரதமும் ஒல்லும் வகையால் முறையாக முயன்று நிறைவேற்றும் கர்மவீரனாகக் காலஞ்சென்ற முதலியார் திகழ்ந்தார்கள். எண்ணியார் திண்ணியராகப் பெறின், எண்ணிய எண்ணியாங்கு எய்துவரல்லாவா? இதனாலன்றோ அவர் சமயப் பணியிலும் சமூகப் பணியிலும் சிறந்து விளங்கினார்கள்.

பிறவிப் பிணிக்கு பெருமருந்தாகிய சைவ சித்தாந்த தத்துவச் சிந்தனையின் சிகரமாக விளங்கும் திருமுறைப் பண்ணிசையை நாவலர் பெருமானின் நெறி நின்று வளர்ப்பதில் பெருமுயற்சி எடுத்தார்கள். ஐந்து ஊர்களிலும் பண்ணிசை வகுப்புகளை சங்கங்கள் மூலம் அமைத்து தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களை நியமித்தார்கள். மேல் வகுப்புக்களை ஆசிரியர் தரம் வரையும் கற்பிக்க ஓதுவார் மூர்த்தி வே. த. வீ. சுப்பிரமணியம் அவர்களைநாடி அவர்களின் சேவையைப் பெற்று உதவினார்கள். தற்சமயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 ஊர்களிலும் 100 பிள்ளைகள் வரையில் பண்ணிசை கற்கின்றனர். சென்ற வருடம் ஆசிரிய தரத்தில் சித்தியடைந்தவர் திருமுறைப் பண்ணிசை ஆசிரியராக அரசால் நியமிக்கப்பட்டுள்ளார். சமயதீட்சை, திருக்கோயில்களில் பஜனைகள், நால்வர் குரு பூசைகள், சிவராத்திரி, நவராத்திரி, திருவெம்பாவை முதலிய பூசைகளையும், சமய பாடப் போட்டிப் பரீட்சைகளையும் சங்கங்கள் மூலம் ஊக்கப்படுத்தினார்கள்.

கருவிலே திருவுடையராதலின் முதலியார் அவர்கள் திருப்பணிகட்கும் கல்விக் கூடங்கள், கலைக்கூடங்களுக்கும் வாரி வழங்கினார்கள். யாம் பெற்ற செல்வம் இவ் வையகம் பெறுக என்பதற்கிணங்க ஏழைகட்கு தாம் ஈட்டிய செல்வத்தைப் பகிர்ந்து கொடுத்தார்கள்.

அவரது வள்ளண்மையும், அற்றார்க்கும் அலந்தார்க்கும் உறுதுணையாகி, அழி பசி நீக்கி அல்லல் தீர்த்த பண்பும், சான்றாண்மையும் அவரது மகத்தான ஆளுமை யின் ( Personality ) அறிகுறிகளாகும்.

ஆகவே அவரது தர்மங்கள் நிலைத்து நீடிக்க ஆவன செய்வதே நாம் அவரது ஆன்மசாந்திக்கு அளிக்கக்கூடிய நன்றிக் கடனாகும்.

**சி. விஸ்வலிங்கம்,**
(செயலாளர், மானிப்பாய் கோயிற்பற்று,
இந்துசமய விருத்திச் சங்கம். )

---

# முதலியார் மறைவிற்கு அஞ்சலி !

' ஆதரவற்ற கலைஞர்கட்கு உதவுவதிலும், கலைஞர்களுக்கு உற்சாகமும், ஊக்க மும் அளிப்பதிலும் சைவதமிழ் வளர்ச்சிக்காகவும் பெரிதும் உழைத்துவந்த முதலியார் வை. மகேசனின் மறைவு பெரிதும் கவலையளிக்கிறது '.

கலைத்துறையில் மிகுந்த ஆர்வம் கொண்ட முதலியார் மகேசன் ஆதரவற்று நலிந்திருந்த நாதஸ்சுரக் கலைஞர் கோவிந்தசாமிக்கு உதவுவதிலும் அவரது இறுதிக் கிரியை முன்னின்று நடத்துவதிலும் ஈடுபட்டு ஏனையோருக்கு முன்மாதிரியாக திகழ்ந் தார். சைவ, தமிழ் வளர்ச்சிக்காகவும் அவர் அயராது பாடுபட்டார். கீரிமலை குழந்தைவேல் சமாதியை நிர்வகித்து அங்கு ஏராளமானோருக்கு உதவி வந்தார். அவரது மறைவு எமது தமிழ் சமூகத்திற்கும் குறிப்பாக கலைஞர்களுக்கும் பேரிழப் பாகும்.

**எஸ். ஆர். ஞானசுந்தரம்**
இசைவேளாளர் சங்கச் செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" சிவநெறிப்புரவலர் "

## க. கனகராசா ஜே. பி.

அவர்களின்

# அனுதாபச் செய்தி

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவரென்றால் அது அமரர் முதலியார் வை. மகேசன் அவர்கள் தான். தன்னலங்கருதாது, எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுமெனப் பல கைங்கரியங்களை வாழ்நாளில் செய்தவர். ஏழைகள் வாழ என கல்லுண்டாயில் ஓர் குடியேற்றத்தையே கிராமசபைத் தலைவராக இருக்கும்போது உருவாக்கினவர். பல ஆலயங்களைப் புனருத்தாரணஞ் செய்வித்தவர். ஓர் சிற்பியைப் போன்று ஆலய அமைப்பில் அனுபவம் பெற்ற பெரியார்.

அன்னார் வாழ்க்கையில் செய்த பல்வேறு தரும கைங்கரியங்களிற் தலைசிறந்ததும் அவரின் புகழுடம்பு அழியாதிருக்கக்கூடியதுமான இரு பெரும் செயல்களில் ஒன்று மானிப்பாய் கோவில் பற்று இந்துசமய விருத்திச் சங்கத்தை ஸ்தாபித்து திருப்பணிச் சபையை ஏற்படுத்தி பண்ணிசை வகுப்புக்களும் ஆலயங்களிற் கூட்டுப்பிரார்த்தனை சமய தீட்சை வைத்தல் முதலியனவும் தடையின்றி நடைபெறக்கூடிய ஒழுங்குகளையும் அவற்றிற்கான மூலதனத்தைச் சேர்த்து வங்கியிலும் இட்டு முன்யோசனையுடன் செயற்பட்டார். அடுத்ததாக அண்மையில் தனது மணிமண்டபத்தையே கொடுத்து ஓர் அனாதை இல்லம் அமைத்தார். இவ்விரு செயல்களும் அவருக்கு இம்மைக்கும் மறுமைக்கும் புகழைக் கொடுக்கக்கூடியது.

இன்னும் அவர் ஆறுமுக நாவலரின் புஷ்பவிதிக்கமைய திருக்கோவில்கள்தோறும் வில்வை, கடம்பு, கொன்றை, திருவாத்தி மற்றும் பூ மரங்களை மில்க்வைற் ஸ்தாபனத்தாருடைய ஆதரவுடன் பூந்தோட்டங்களை அமைத்த பெருமை அவரைச்சார்ந்ததே.

அமரர் முதலியார் வை. மகேசனுக்கு நாங்கள் ஒன்றுபட்டுச் செய்யக்கூடிய உதவி அவரின் வழிநின்று இந்துசமய விருத்திச் சங்கத்தையும், அனாதை இல்லத்தையும் முறைப்படி நடாத்துவதே.

அன்னாரின் ஆத்மா சிவபதத்திற் சாந்தியடைக.

ஓம் சாந்தி. ஓம் சாந்தி. ஓம் சாந்தி.

மில்க்வைற் தொழிலதிபர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியார் வை. மகேசன் J. P. அவர்களுக்கு

மானிப்பாய் இந்து சமய விருத்திச் சங்கத்தின்

# கண்ணீர் அஞ்சலி

மகேசன் என்னும் மாமலை சரிந்தது
மானிப்பாயின் மகுடமும் சாய்ந்தது
தேசத் தொண்டு தெய்வத் தொண்டு
சமூகத் தொண்டு சகலமும் ஓய்ந்தது.

பணமும் இருந்தது பண்பும் இருந்தது
பல்கொடையைச் செய்யும் கொள்கையும் இருந்தது
நேசமும் இருந்தது பாசமும் இருந்தது
நல்லதைச் செய்ய நல் இதயமும் இருந்தது

எழுபத்தாறு நீள் ஆண்டுகள் வாழ்ந்து
சகல துறையிலும் சரிசமமாக
தொண்டே குறியாய் தூய நினைவுடன்
நன்றே செய்தனை நானிலம் மெச்ச

இந்துசமயம் வளர்க்க வென்று
தந்தையே! இச்சங்கத்தின் தலைவன் ஆகினுய்
தலைவன் ஆகிச் சடுதியில் இதனை
மலையளவாக வளர்த்தனை நீயும்!

தலைவனுகிச் சடுதியில் இதனை
மலையளவாக வளர்த்த நீயும்
திடுமென இறைவன் திருவடி நிழலை
கடுகியே அடைந்தாய்! வாழி நின் நாமம்!

மானிப்பாய் இந்துசமய விருத்திச் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைவு ஈடுசெய்ய முடியாதது

சண்டிலிப்பாய்க் கிராமத்திலும் சைவம் வளரவேண்டும், மக்கள் சைவ சமய வாழ்வு வாழ வேண்டும், சமய ஒழுக்க நெறி நிலைத்து விளங்க வேண்டும், தூய்மை யான வாழ்வு வாழ்ந்து பெறுதற்கரிய பேரின்பப் பேற்றை அடையவேண்டும் என்ற பெரும் சிந்தனையால் மானிப்பாய் கோயிற்பற்று இ. ச, வி. சங்கத்துடன் சண்டிலிப் பாய்க் கிராமத்தையும் சேர்த்து சண்டிலிப்பாயிலும் இந்து சமய விருத்திச் சங்கத்தைத் தாபித்த பெருந்தகையோர் அமரர் முதலியார் மகேசன் அவர்கள். சங்கமும் வளர பேச்சிலும் மூச்சிலும் செயலிலும் அயராது அல்லும் பகலும் உழைத்து உடல், பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணித்த சான்றாண்மை மிக்க பண்பாளர். அன்னாரை இழந்து சண்டிலிப்பாய் மக்கள் ஆறாத்துயரில் மூழ்கியுள்ளனர். அவரது மறைவு சைவ சமய விருத்திக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அமரர் முதலியாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருடனும் மா. கோ. ப. இ. ச: வி. சங்கத்தினருடனும் சண்டிலிப்பாய் மக்களும் துயருறுகின்றார்கள். அன்னாரின் ஆத்மா சாந்தியடைந்து இறைவனடி சேர அனைவரும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்:

வ. நடராசா
செயலாளர்
சண்டிலிப்பாய் இ. ச. வி. சங்கம்

---

## தரும சிந்தனையாளரும் கொடைவள்ளலுமாகிய
# முதலியார் அவர்கள்
### சிறு வியாபாரிகளுக்கு ஓர் திரி தூண்டி போன்றவர்

ஓர் ஸ்தாபனத்தில் பல வருடங்களாக சம்பளத்திற்கு கடமை செய்த என்னை சிந்திக்க வைத்த செம்மல். முகாந்திரம் ஐயா அவர்களை தனிமையில் கண்டு பேசும் சந்தர்ப்பம் கிடைத்தது ஓர் நாள். அவர் சொன்னார் ஒருவனுடைய வாழ்நாளில் ஒரு முறைதான் முன்னேற சந்தர்ப்பத்தை கடவுள் தருவார். அதிலிருந்து முன்னேறிக் கொள்வது உனது கெட்டித்தனம் என்றார். எதிர்பாராத இவ்வசனம் என்னைச் சிந் திக்க வைத்தது. ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள் என்றேன். உமது ஊக்கத்தை கவ னித்தேன். நீர் ஏன் ஓர் சொந்தக்கடை வைத்து முன்னேற்றமடையக்கூடாது என்று கேட்டார், நான் என்னுடைய பொருளாதார முட்டுக்கட்டையைக் கூறினேன், இடத்தை எடும் பிறகு பார்ப்போம் என்றார். சொன்னதுபோலவே செய்தார். கடனு தவியும் விசேட விலைக்கழிவும் தந்து என்போன்ற சிறிய வியாபாரிகளை கைதூக்கி விட்ட ஓர் திரி தூண்டியானார்.

வாழ்க அவர்கள் நாமம், வாழ்க அவர்கள் விட்டுச் சென்ற பணி,
அவர்கள் ஆத்மா சாந்தி அடைவதாக.

செ. முத்துக்குமாரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுதாபச் செய்தி

அன்பின் திருவுருவே! ஆற்றலின் முழுவடிவே! கூற்றுவனார் தம் கொடுமையினால் இங்கிருந்து யாம் புலம்ப விண்ணோடு சென்ற வித்தகனே! முதலியார் மகேசன் என்னும் வளமார்ந்த வண்மையனே! மறைந்தும் மறையாத மாணிக்கமே! உனது பார்வையிலே கருணைபொழியு மந்தோ! உன் சிரிப்பினில் உள்ளம் குளிர்ந்திடுமே! உங்களது யாழ்ப்பாணக் கிளை ஸ்தாபனத்திற்கு கடந்த 25 வருடங்களுக்கு மேலாகக் கொழும்பில் இருந்து சாமான்கள் ஏற்றிக் கொடுத்த காலம் தொட்டு எங்களை மிகவும் கண்ணியமாக நடத்தி வந்தீரே. உங்களது பிரிவினால் நாங்கள் மனம் வருந்துகின்றோம். அவரை இழந்து தவிக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் எங்களது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

அன்னாரது ஆத்மசாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்,

எஸ். எம். கச்சு மொகமட் அன் சன்ஸ்

---

## நவாலி இந்து சமய விருத்திச் சங்கம்

சிந்தனையில் தூய்மை முகத்தில் இளஞ் சிரிப்பு
எந்த நேரம் சென்றாலும் இனிய உபசரிப்பு
தந்த மகேசன் ஐயா! தாரணியில் இன்றில்லை
இந்து சமயச் சங்க ஸ்தாபகரும் போனதெங்கே?

இன்சொல்லால் வாய் மணக்கும்
ஈகையினால் கைசிவக்கும்
அன்பர் மகேசன் ஆற்றிய நற்பணியெல்லாம்
நின்றுலவும் என்றும் நின்னை மறவோம் நாம்

சின்னஞ் சிறுவர் சீராக வாழவென்று
எண்ணி நீ எடுத்த மகேஸ்வர இல்லம்
பென்னம் பெரிய கொடைகள்
பேர் சொல்லும் என்றென்றும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டினுல் உயர்ந்த பெரியார்

கற்று வல்ல பெரியோர்களும் நிதி திரட்டி வாழும் செல்வர்களும் தமக்கென வாழாப் பிறர்க்குரியவர்களும் இன்பத்தோடு மகிழ்ந்து வாழும் கிராமம் யாழ்ப் பாணத்து மானிப்பாய் ஆகும்.

யாழ்ப்பாணத்துக் கிராமங்களுள் மிக்க முதன்மை வாய்ந்தது மானிப்பாய் எனக் கூறின் அது மிகைப்பட்ட கூற்ருகாது. இங்ஙனம் சிறப்புற்ற கிராமத்தைப் பட்டினசபைத் தரத்திற்கு உயரச் செய்வதற்கு அங்கு வாழும் பெரியோர்கள் காரணராய் இருந்தனர். இப்பெரியார்களுள் முதலியார் வை. மகேசனும் ஒருவர் ஆவார்.

சமூகநலத் தொண்டில் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட திரு. மகேசன் அவர்களைச் சமாதான நீதவான், முதலியார் முதலிய கௌரவப் பட்டங்களைக் கொடுத்து மக்களும் அரசாங்கத்தாலும் பாராட்டுக்குரியவராய் வாழ்ந்திருக்கின்ருர். பல சமய, கலாச்சார, சமூக சேவைகளை முன்னின்று நடத் தியும் மக்களை ஊக்குவித்தும் தமது பிற்கால வாழ்வைச் செலவிட்டு வாழ்ந்தவர் திரு. மகேசன் அவர்கள்.

"ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் திரு"

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு இலக்கியமாகத் திகழ்ந்தார்.

கீரிமலையில் நடத்தப்பெற்று வருகின்ற சிவநெறிக் கழகத்தின் அரிய சமய சேவைகளை அறிந்து தாமாக முன்வந்து பண உதவி புரிந்தும் நிகழ்ச்சிகளிற் பங்கு கொண்டும் கழகத்தை ஆதரித்து நின்ற பெரியோர்களுள் ஒருவராக இவரை நாம் போற்றுகின்ருேம்.

இம்மாபெரும் தொண்டர் பரகதிப்பேறு உற்றமைகேட்டுச் சிவநெறிக் கழகம் தனது அருந்துணைவர் ஒருவரை இழந்தாற்போன்ற பெருந்துன்பத்தை அனுபவிக் கின்றது. அவருடைய ஆன்மா சாந்திபெறக் கழகத்தார் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றனர்.

சிவநெறிக் கழகம்,
கீரிமலை, காங்கேசன்துறை.
1086 - 03 - 16.

ச. விநாயகரத்தினம்.
சிவநெறிக் கழகச் செயலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பிற்குரிய முதலியார் வை. மகேசன் J. P. குடும்பத்தினருக்கு
" லிங்கவாசா "
முதலியார் மகேசன் வீதி,
நவாலி, மானிப்பாய்.
பேரன்புடையீர்,

## சமூகத்தொண்டரின் அனுதாபச் செய்தி

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும் "

என்னும் வாக்குக்கிணங்க அமரர் முதலியார் வை. மகேசன் அவர்கள் 1949ம் ஆண்டு யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசத்தின் ஆரம்ப கர்த்தாவாகவும் இதன் கௌரவ பொருளாளராகவும், சிறந்த சமூகசேவையாளராகவும், தொழில் அதிபராகவும் இருந்து பல அளப்பரிய சமூகத்தொண்டுகள் செய்து எம் எல்லோரையும் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு வானுலகு எய்திவிட்டார். அந்த அளவுக்கு அவருடைய செயல் எல்லோரிடமும் மரியாதை உண்டாக்கியிருந்தது.

இப்பெரியாரை இழந்து தவிக்கும் இவர் குடும்பத்தினருக்கும், பிள்ளைகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். அன்னார் வடபகுதியில் சனசமூக நிலையங்களின் வளர்ச்சிக்கும் ஒன்றியத்தின் வளர்ச்சிக்கும் செய்த அளப்பரிய பயணிகளை நாம் ஒருபோதும் மறக்க முடியாது.

எல்லோரது அபிமானத்துக்குரிய அவரது ஆன்மா சாந்தியடைய எல்லோருடனும் சேர்ந்து நானும் ஒன்றியத்தின் சார்பில் பிரார்த்திக்கின்றேன்.

வணக்கம்

இங்ஙனம்
சமூக சேவையில் உள்ள
சி. சி. வரதராசா

---

## என்றும் என் நினைவில்

என்றும் என் நினைவில் நிற்கும் ஐயா பரிவுடன் அன்புகாட்டி வாழ்வழித்த தெய்வமே! மறைந்தும் என் மனதை விட்டு மறையாத அய்யனே! உனை எண்ணி தினம் ஏங்குவது என்நெஞ்சமே! சாதாரண கூலியாளராகவும், சாரதியாகவும் (பதின் மூன்று) 13 ஆண்டுகள் கழிந்தன, இக் கால எல்லையில் எனது நல்வாழ்வுக்கு தாங்கள் பல வழிகளிலும் சிரமம் பாராது நல்கிய உதவிகளை என்னால் மறக்கவும் முடியுமோ! தங்கள் அமைதியான குரலால் இராஜலிங்கம் என அழைத்த அக்குரல் இன்னும் என் காதில் நிலைத்து நிற்கின்றது. தங்கள் ஊழியன் போலல்லாது தங்கள் குடும்பத்தில் ஒருவனாக கருதி என்னை பேணிக்காத்த பெருந்தகையே! நின்பிரிவை என்னால் தாங்கமுடியவில்லையே! என் செய்ய எல்லாம் விதியின் விளைவே! எனக்கு மட்டுமா தாங்கள் வாழ்வழித்தீர்கள் இல்லை பல உயிர்களுக்கு உடன் தேவை அறிந்து உதவி செய்த கரங்களும் ஓய்ந்தது. தங்கள் பிரிவால் துவண்டு போன பல நெஞ்சங்களோடு என் நெஞ்சினையும் இணைத்து இறைவனிடம் தங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கிறேன்.

இவ்வண்ணம்
நன்றி மறவா,
செ. இராசலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனைக்கோட்டை இந்துசமயவிருத்திச் சங்க

## இ. சரவணபவன் அவர்களின்

# அனுதாபச் செய்தி

மானிடப் பிறவி பெறுதற்கரியது. நல்வாழ்வுக்கும் சிறப்புக்கும் அடித்தளமாக அமைவது ஆத்மீகம். ஆன்மாவுக்கு லாபம் தேடுபவன் இறைத்தொண்டு செய்ய வேண்டும் இந்த உண்மைகளை உணர்ந்து இடையறாது தொண்டு செய்து இறையடி சேர்ந்தவர் அமரர் முதலியார் வை. மகேசன். இவர் சைவம் வளர்த்த பரம்பரையில் தோன்றி நவாலி சிந்தாமணிப் பிள்ளையார் கோவில்; முருகன் கோவில் மணி மண்டபம் போன்ற தெய்வீக ஆலயங்கள் மண்டபங்களை சீர்பெற அமைத்து தன்னிலும் மேலாக கவரிமானைப்போல் போற்றி வந்தார். நவாலி அட்டகிரி முருகனோடு அளவிலா ஈடுபாடு கொண்டவர். தெய்வத்தொண்டு செய்து தெய்வீக வாழ்க்கை வாழ வழிசெய்தார்.

மானிப்பாய் கோவிற்பற்றில் மானிப்பாய் இந்துசமய விருத்திச் சங்கத்தினை ஆரம்பித்து அயல்கிராமங்களில் கிளைச்சங்கங்களை உருவாக்கி நால்வர் குருபூசைகள், பஜனைகள்; நவராத்திரி; பண்ணிசை வகுப்புகள், சமயபாடப் பரீட்சைகளையும் நடாத்தி அவற்றின் பெறுபேறுகளை 1980ம் ஆண்டு தொடக்கம் — 1986ம் ஆண்டு இன்றுவரை சிறப்பாக நடாத்திய உத்தம புருஷன் அமரர் வை. மகேசன் ஆவார். அவரை நினைத்தால் திடீர் எனக் காலன் கணக்கிட்டு விட்டானே இஃது நாம் செய்த தவக் குறைவாகும். மேலும் கடைசி நேரத்திலும் தன்னுடைய தெய்வீகவழியில் மணிமண்டபத்தினை மானிப்பாய் பிரதேச அனாதைகள் இல்லமாகிய மகேஸ்வரன் இல்லத்தையும் ஆரம்பித்த திருத்தொண்டு அமரரையே சாரும். அமரரின் ஆத்மா சாந்தியடைய ஆனைக்கோட்டை இந்துசமய விருத்திச் சங்கம் பிரார்த்திக்கின்றது.

இங்ஙனம்,
உண்மையுள்ள,
இ. சரவணபவன்,
( தனாதிகாரி )

ஆனைக்கோட்டை இ. ச. வி. ச,
8-3-86.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவாலிக் கிராமத்தின் தவப் புதல்வன்

# அமரர் வை. மகேசன் அவர்களுக்கு

## நவாலி அட்டகிரி கந்தசுவாமி தேவஸ்தானத்தின் வழிபடுவோர் சங்கத்தினதும் தர்மகர்த்தா சபையினதும்

# கண்ணீர் அஞ்சலி

---

அமரர் வை. மகேசன் அவர்கள் சைவத்தை வளர்த்துக் காக்க தன் வாழ்நாளில் பெரும் பகுதியை அர்ப்பணித்து சைவப்புலவராக உயர்ந்து நின்ற பெரும் பேற்றை நினைவுறுத்திப் பார்க்கின்றோம்.

கூட்டுறவின் வளர்ச்சிக்கு முதுகெலும்பாக விளங்கி வடஇலங்கை கூட்டுறவுச் சம்மேளனத்தை உருவாக்கி உழைத்து நவாலியிலே கூட்டுறவுத் தத்துவத்தை வேரூன்ற வைத்த உத்தமனே நின் சேவையை எண்ணிப் பார்க்கின்றோம்.

சைவசமய தேவஸ்தானங்களை நிர்மாணிக்க விசுவகன்மாவுக்கு நிகராக காசிச்சிற்ப அமைப்பில் நிர்மாணித்த திருத்தலங்கள் எத்தனையோ. நின் சிறப்பை நினைவுறுத்த பூலோகம் தன்னில் விளைவித்த தியாகங்கள் எல்லாம் வரலாறு ஆகட்டும் என்றே விண்ணுலகம் சென்றாய் எம் குருவே.

1961-ம் ஆண்டில் நவாலி அட்டகிரி கந்தசுவாமி தேவஸ்தான திருப்பணிச் சபையை தலைமை தாங்கி உருவாக்கி ஆறு ஆண்டு காலத் திருப்பணியை நிறைவு செய்த நின்சேவையை நினைவுகொண்டு பார்க்கின்றோம். 1980-ம் ஆண்டில் எமய தேவஸ்தான வரலாற்றில் நெருக்கடியான காலத்தில் தருமகர்த்தா சபை அமைந்து அதில் ஒரு சிரேஸ்ட தருமகர்த்தாவாக ஐந்து ஆண்டு காலம் ஆத்மீகத் தொண்டு செய்த அமரர் அவர்களிற்கு எமது அஞ்சலியைச் செலுத்துவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அட்டகிரி முருகனை பிரார்த்திக்கின்றோம்.

வழிபடுவோர் சங்கம், தர்மகர்த்தா சபை
நவாலி அட்டகிரி கந்தசாமி தேவஸ்தானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவப் புலவர்

# அமரர் முதலியார் வை. மகேசன்

அவர்களுக்கு

## நவாலி வடக்கு நாச்சிமார் கோவில்
## திருப்பணிச் சபையினரின்

# கண்ணீர் அஞ்சலி

உலகளாவிய பெரும் புகழ் பெற்று சைவத்தையும்,

தமிழையும், கூட்டுறவையும் வளர்த்த நவாலிப் பழங்குடி மகன்

## அமரர் வை. மகேசன்

அவர்களுக்கு

எமது ஆத்ம சாந்தியை செலுத்துகின்றோம்.

நவாலி வடக்கு நாச்சிமார்கோவில் திருப்பணிச்சபை அமைக்க கருவூலமாக இருந்து இறுதிவரை தொண்டு செய்து ஆலயத்தை புது மெருகு ஊட்டி, வாரி வழங்கி தொண்டு செய்யும் தர்ம வான்களுக்கு களம் அமைத்துக் கொடுத்து தன்னலமற்ற சேவை செய்த நின் நினைவு எம்மை விட்டகலாது.

அன்னாரின் ஆத்மா சிவபதமடைய பிரார்த்திக்கின்றோம்.

இவ்வண்ணம்,
பிரிவாற் துயருறும் திருப்பணிச்சபை,
நாச்சிமார் கோவில்,
நவாலி வடக்கு, நவாலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவர்க்கம் இதோ போனுர்!

சத்தமே செய்யாத — ஒரு
தத்துவ விளைவே இவன்!
புத்தம் புதுமலரின் — சுக
சுத்தம் இவன் சித்தம்!
'முத்து' விளைவாகும் — மௌன (ச்)
'சிற்பி'! மொத்தத்தில்
இத்தரை கண்ட சுவைச்
சித்திரம் இவன் வாழ்க்கை.

வீடெனும் குடம் விழுங்கும்
விளக்கல்ல! — இம் மகேசன்,
நாடெனும் நலம் நினைத்த
முழுநிலா! ஒருவன் வாழ்வில்
தேடியே அடையத் தக்க
நட்பிவன்! இவனேடிங்கே
கூடிநான் வாழ்ந்த நாட்கள்
திருவிழா நாட்கள் ஆகும்!

விருந்தானேன்! தேவை வேண்டின்
விருப்புடன் வெறுப்பும் மீறி
மருந்துமாய் ஆனேன்! இவனேர்
மகத்துவம்! கீதை சொன்ன
'கர்மமே தர்மம்' என்ற
கருத்துக்கு இவனே அர்த்தம்
இரும்புபோல் உறுதி! உள்ளே
இதயம்செங் கரும்புச் சாறு!

'தெய்வம் உலாவந்த — கோயிற்
திருத்தேர் இவன்' என்றல்
பொய்யுரை ஆகாது! — இவனைப்
புரிந்தவன் நான் சாட்சி!
'செய்கை நலம்' காத்தான் — வாழ்வில்
சிகரநிலை யாத்தான்!
கொய்த மணி ஆனுன்! — ஈற்றில்
சுவர்க்கம் இதோ போனுர்!

சகோ. பிர. பாலகிருஷ்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாந்தரம் திரு. மகேசன் அவர்களும் சுகாதாரவாரக் கொண்டாட்டமும்

இம் மாதம் நமது இலங்கையிற் பலவிடங்களிலும் சுகாதார வாரக் கொண்டாட்டங்கள் நடைபெற்றன. ஆனால் வலிகாமம் மேற்குப் பகுதியில் முகாந்திரம் மகேசன் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்ற கிராமச் சங்கங்களின் சுகாதார கொண்டாட்டங்களுக்கு ஒரு விசேட பெருமையுண்டு. அது எதனாலெனின்?

நவாலி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற சுகாதார வார விழாவில், சுகாதார முறைப்படி வளவுகளையும், இல்லங்களையும், உணவுக் கடைகளையும் வைத்திருந்தவர்களுக்கு விசேட பரிசுகள் வழங்கியதும், சண்டிருப்பாயிலும், நவாலியிலும் பொதுமக்களின் நன்மையின் பொருட்டு இலவச சுதேச வைத்தியசாலைகளைத் திரு. மகேசனவர்கள் நிறுவி உபகரித்ததுமாகும்.

இவையன்றி திரு. மகேசனவர்கள் இக் கொண்டாட்டங்களுக்குப் பிரபல சித்த ஆயுர்வேத டாக்டர்களையும், ஆங்கில டாக்டர்களையும் சுகாதாரத் தலைவர்களையும் மற்றும் அறிஞர்களையும் வரவழைத்து கேட்போர் உள்ளத்திற் பசுமரத்தாணி போல் எளிதிற் பதியுமாறு சுகாதாரத்தைப் பற்றிய அரிய சொற்பொழிவுகளையுஞ் செய்வித்துள்ளார்.

இக் கொண்டாட்டங்கள் நவாலியில் மாத்திரமன்று வலிகாமம் மேற்குப் பகுதியிலுள்ள சுதுமலை, சண்டிருப்பாய், ஆனைக்கோட்டை, வட்டுக்கோட்டை முதலியவிடங்களிலும் அதியற்புதமாய் நடைபெற்றன. இவைகளுக்கெல்லாம் காரணமாய் அச்சாணி போன்று தலைவராய் இருந்து நடத்திய முகாந்திரம் மகேசன் அவர்களின் உதார குணமும், தண்ணளியும், ஈகையும் யாவராலும் பாராட்டற்குரியனவாகும்.

இவரின் முன்மாதிரியைப் பின்பற்றி மற்றக் கிராமச் சங்கத்தவர்களும் ஆங்காங்குள்ள பொதுமக்களின் நன்மையைக் கருதி, அரசினர் நன்கொடையாக அளிக்கும் பணத்தைப் பெற்று ஒவ்வொரு கிராமங்களிலும் சுதேச வைத்தியசாலைகளை அமைத்து நடத்தினால், அது நமது நாட்டு மக்களுக்குச் செய்யும் நற்பணிகளுள் முதன்மையானதாகும். அதனால் பொதுசனங்கள் பிணி நீங்கியவர்களாயும், தேக திடமுள்ளவர்களாயும் வாழ்வர், நமது நாடும் முன்னேற்றமடையும்.

— ஆசிரியர், 'வைத்தியன்' என்னும் நூலில்.
*(1952 – 53)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகானந்த சனசமூக நிலையத்தின்

# அஞ்சலி

"நவாலியின் செல்வனே,"

நவாலி மண்ணிற்குப் பெருமை தேடித் தந்தவர்களுள் நீங்களும் ஒருவர்.

"ஒப்பற்ற தொண்டனே,"

சமூகத் தொண்டனாக, சமயத் தொண்டனாக விளங்கி முழுமையான வாழ்வு வாழ்ந்த மேன்மை பெற்றவர் நீங்கள்.

"அன்பான பெரியோய்,"

முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்பு மானிப்பாய்க் கிராமசபைத் தலைவராக நீங்கள் பதவி பெற்றிருந்த காலத்தில் எங்கள் நிலையம் உங்களால் திறந்துவைக்கப்பட்டது. எமது நிலையத்தின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு நிலைய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு ஆதரவும் உற்சாகமும் அளித்த உங்கள் பிரிவால் நாம் துயருறுகிறோம்,

"சமூகசேவையாளரே,"

கல்லுண்டாயில் உள்ள வீடமைப்புத் திட்டத்தின் தந்தை நீங்கள். நீங்கள் ஆற்றிய சமூகப் பணியின் உயர்ந்த சிகரம் அது. அப் பகுதிக்கு முதலியார் மகேசன் சதுக்கம் எனப் பெயர் சூட்டியது மிகப் பொருத்தமே.

"சைவத் தொண்டில் திளைத்தவரே,"

மானிப்பாய் இந்துசமய விருத்திச் சங்கம் உருவானதன் காரணகர்த்தா நீங்கள். பண்ணிசை, சமயப் பரீட்சை, கூட்டுப்பிரார்த்தனை என்பனவும் இவை அனைத்திற்கும் மேலாக நீங்கள் ஆரம்பித்து வைத்துள்ள சைவச் சிறுர்களின் அனாதை இல்லமும் உங்கள் முயற்சியின் முழுமைக்கு முழுமையான சாட்சிகள்.

"பண்பு நிறைந்த பெருமகனே,"

அன்பான வரவேற்பு, பாசத்துடன் கூடிய அறிவுரைகள் என்பன உங்கள் இல்லத்தில் எமக்குக் கிடைத்தவை. சமூக வாழ்வில் சாதாரணமாகக் காணப்படும் பிணக்குகள் பலவற்றை முன்னின்று தீர்த்துச் சமரசம் செய்து. சமாதானம் நிலவச் செய்வதில் வல்லவர் நீங்கள். "சமாதான நீதவான்" என்ற பட்டம் எழுத்துக்கு எழுத்து உங்களுக்குச் சாலத் தகுந்ததே.

கண்ணியம் நிறைந்த, கடமை உணர்ச்சியுடைய, கட்டுப்பாடாக வாழ்ந்த பெருமகன் பிரிவால் நாம் கலங்குகிறோம்.

அன்னார் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் ஒருவராய் நின்று பங்குகொள்கின்றோம்.

இங்ஙனம்,
முருகானந்த சனசமூக நிலையத்தார்
நவாலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகண ரூபன், என்றும் மாபெருந்துணை எமக்கு
மாபெரும் உலகில் என்றும் மறையாத,
செயல் வீரருட் செயல் வீரன்
உத்தமருள் மிகமிக உத்தமன்
மாபெரும் அன்புக்கலை மேதை நவாலியூர்

# லிங்கவாசம் முதலியார் வைத்திலிங்கம் மகேசன்

எனப்பெரும் புகழைப் பேரொளியாய்

# விளங்கவைத்த, இன்முக அண்ணல்! நினைவு உரை!!

எனவே! பாரம்பரியமாக, எமது உலகத் தமிழ், மாபெரும் மூதாதைகள் "மெய்க்கீர்த்திப் பிரதாபம்" என்ற. ஞாபக சின்னம் இமயம் போன்ற உயர்வை, என்றும் மங்காத ஒளித்தம்பத்தை ஒவ்வொருவரும் தவருது நிலைநாட்ட வேணும் என எமக்கு உறுதிகூறி வைத்தனர்.

ஆகவே, இன்முகம் புன்சிரிப்பு - கள்ளங் கபடு அற்ற அன்புக் கலைமேதை அண்ணல், மேற்சுட்டிய உத்தம செயல் வீரன், ஆக்கச் செயல் வீரன் முதலியார் வை. மகேசன், தனக்குத்தானே பெரும் உவமையாக, மங்காத ஒளிபடைத்த - மிகமிக உன்னத "மெய்க்கீர்த்திப் பிரதாபம்" என்னும். மாபெரும் சிலைக்கம்பத்தை நிலைநாட்டி வைத்தார். மேலும் நடமாடும் அன்புருவக் கலைக்கோயிலாகவும், பலகோணத்திலும் தன்னைப் புடம்போட்டு பத்தரை மாற்றுத் தங்கம் என, உலகறிய உரைகல்லாக வைத்தார் அண்ணல். எடுத்துக்காட்டு முன்மாதிரியாசு, "மெய்க்கீர்த்திப் பிரதாபம்" என்னும் புகழ்க்கம்பத்தை யாவரும் அறிய நிலைநாட்டி வைத்தார். இவர் இன்னும் கல்வி கலை கலாச்சாரம் - நாகரிகம் - கௌரவ மேதைப் பண்பாடு, சீர்சிறப்பு ஒழுக்கம், விருந்தோம்பல் - உறுதுணை புரிதல் - செவிமடுக்கும் காருண்ணியம், கருணை - தெய்வ பெலனின் தெய்வ நம்பிக்கை - நல்லோர் - தீர்க்கதரிசிகளின் அடிச்சுவடு - யாதும் குறைபடாது நிறைவாக - தனக்குத்தானே - சான்று - சாட்சி - நடுநிலை நீதி மன்னன் (J. P.) ஜே. பி - (முடிசூடாத மன்னன்) இளங்கோவாக வாழ்ந்து காட்டினுர். பணம்படைத்த செருக்கு என்பது இவரிடம் கிடையாது. இந்த நோய் இவரிடம் மருந்துக்கும் கிடைக்கவே, கிடையாது! மகாமுக்கியம் இது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுநல சமூகசேவையிலும் - வர்த்தக வணிக தொழிற்றுறை சேவையிலும்- உயர் நீதிமன்ற யூரர் சேவையிலும் - நடுநிலை பிசகாத மன்னனாக, இவ்வண்ணல் மேன்மைகொள் சமயக்கோட்பாடுகளை மகான் திருவள்ளுவர் குறளின் கோட்பாடுகளை சிறுகணமும் கைவிடவில்லை "மறக்கவில்லை". இதில் முதலியார் - உயர்திரு. வை. மகேசன் வாழ்ந்து காட்டி, மேதைகள் உலகில் முதற்பரிசு பெற்றார் - மாபெரும் நற்சிந்தனைச் சிற்பி - செயல் ஆக்கவீரர், இவருக்கு - இவரே மகாபொருத்தம்.

இவர் இறந்தார் என்பது, மிகமிக பொருந்தாக்கூற்று. காண்டல் உலகு - கருத்துலகு - நெடுந்தூர உலகு - வீட்டுலகு - வாராத உலகு, வரும் உலகு - இவைகளை படிப்படியாக, தேவை நோக்கி - அண்மித்துக் கொண்டார். காண்டல் உலகின் - மாயை மாயை என்னும், உடற்கூற்றுச் சட்டையை - மாற்றி - மாறிய - செயற்றிண்மை வீரர். உணர்ச்சி வீரர்.

"ஒளிபடைத்த கண்ணினாய் வா, வா", என - வீட்டுலகில் வாழ்வு - விருந்தோம்பலுக்கு, சிவகணத் தலைவன், சிவகணத் தலைவி - பெரும்புகழ் படைத்தோரில் ஒருவராக - எங்கள் அன்புகலை அண்ணலை அழைத்தார்கள். இவர்கள் தெய்வச்சபைக்கு ஏன்? ஐயா அவர்கள் ஆரும் அறிந்த உண்மையாளர் - உண்மையில் உண்மை - பெரிய புராணம் - அண்ண மகேசன் உடல், உயிர் - சொத்து - வாழ்வு - மதிப்பு - நாட்சிறப்பு - இரவு - பகல் எக்கணமும் இதில் ஆறாத காதல் - மகாசிந்தனை கண்ணோட்டம்.

இவ் அண்ணல் நடமாடும் கலை அன்பு வடிவில், தம்முடன் இணைந்த சக அன்புத் தோழருடன், பலகோணத்திலும் சிவ ஆலயங்கள் சென்று - தாமும் ஒரு பெரிய புராணமாக, தாமும் ஒரு சிவகண அடியார் கூட்டமாக, இன்னிசை ஆயத்தங்களுடன் காலம் தவறாது - குறிப்பிட்ட சிவாலய பூசை - நேரத்தில் பின்னாக - அன்பர்கள் கூட்ட மத்தியில், பெரும் மகிழ்ச்சி அன்பு பிலிற்றும சிவவாழ்வை அண்மி கதாப்பிரசங்கம் செய்தார்கள் - ( தூய சிவப்பொலிவுத் தோற்றத்துடன் ) மெய்யே மெய்!

இதுவா • இன்னும் உள! மகேஸ்வர பூசையின் இலக்காக - நாடுசெழிக்க - மக்கள் செழிக்க, சமூகம் செழிக்க - இல்லங்கள் செழிக்க - உயிரினம் - ஆதுலர் செழிக்க, அன்பர்களுடன் அன்பர்களாகக் குழைந்து - நவாலியூர் சிந்தாமணிப்பிள்ளையார் அருள்மிகு மண்டபத்தில் - பூசையோடு அன்னதானம் யாவருக்கும் வழங்கி - விட்டு உலகை மண்ணுலகில் கண்டார் - பெரும் பெரியார் இவ்வண்ணல் - முதலியார் உயர்திரு. வை. மகேசன் அவர்கள்.

இதன் ஓவியக்கலை வரலாற்றை ............ இன்னும் விரிக்காது மிகமிகச் சுருக்கி, தேன்சொட்டும் தேன்பாகு ஆகத்தந்துள்ளேன். இதிலும், பெரியபுராணத் தொன்மை, அடியார்களையும் - சேக்கிழார் புலவர் பெருமானையும், சோழமன்னனையும் - வரலாற்று அடியார்களையும் - கலைஞர்களையும் - தெய்வபலனின் தனிப்பெரும் உன்னத மேம்பாட்டையும் - தானும் சுவைத்து, மற்றையோரும் சுவைத்து இன்புற, உடல் - பொருள் - ஆவியை, அர்ப்பணித்து, இந்த நிலவுலகில் - மிகத்திறமாக வாழ்ந்த கண்ணியவான் அன்பின் தன்பங்கை வளர்த்த - சலியாத உள்ளம் படைத்த தியாகி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே, இவ்வண்ணலின் - கடைசி நிலவுலக வரலாற்றில் - அநாதைச்சிறுவர்கள் - பாதுகாப்பு இல்லமும், கீரிமலை - குழந்தைவேல் சுவாமி சமாதி பணியும் - இத்தனைக் கும் பொருள் ஊட்டும் உயிர் ஊட்டும் மதிப்பான வைத்திலிங்கம் கம்பனியும், தன் பங்கான சொத்தும் - ஆரும் அறிய - மகிழ - என்றும் இயங்கும் கருவூல வைப்பாக வைத்து, தகுந்த பாதுகாவல், அன்பர் போஷகர்களை உருவாக்கியும் - ( பின்னும் முன்னும் ) இணைந்து செயலாற்றி மகிழ, ஆக்கபூர்வ செயல் வீரராக - உலக வரலாற் றில் மங்காத ஒளிவிளக்காக நிலவினர். தமது சிவபதமும் இதுவேயாக - சென்ற சிவராத்திரியின் ( 8-3-1986 சனி ) முன்பாக, தமது நிலவுலக வாழ்வின் (ஓய்வை ஆறு தலை) இறைவன் பணிப்பில் கண்டு,

இகபரம் இரண்டையும்

ஆனந்தமாக நடத்திப் பிரிந்தார்.

கொழும்பில் தமது - மூத்த சற்புத்திரன் உயர்திரு. ம. கணேசன் குடும்பம் பேரப்பிள்ளைகள், மற்றும் சகபுத்திரர், புத்திரி குடும்பம் - பேரப்பிள்ளைகள் மற்றும் உடன் தோழர், அன்பர், இனமுறையார் - வெளிக்கண்ணாலும் - அகக்கண்ணாலும் - சிந்தனை உணர்ச்சிக் கண்ணாலும் கண்டு - வெதும்ப - பெருகும், அன்பு பாசக் கண்ணீர் வெள்ளத்தில் - இச்செயல் வீரர் - துண்ணென மறைந்தார். இதனால் ஏற்படும் ஈடுசெய்ய முடியாத பஞ்சம், வறுமை எமக்கு சமூகத்துக்கு எம்நாட்டிற்கு அதிகம் ! உத்தம ஆக்கபூர்வ செயல்வீரர் இல்லாத குறைதான் எமது பஞ்சம்.

எனவே, இச்செயல்வீரர் வரலாற்றை - நினைத்து நினைத்து எம் வீட்டுக்கு ஒரு வராக, செயல்வீரர் தோன்றி - எமது சகலமிடிகளையும் மாற்ற, துரத்தி ஓட்ட, அதிவேகமாக, முன்வருவாராக. துன்பம் ஓட்டும் கண்ணீர் அதிவேகமாகப்பரவட் டும் - இவ்வண்ணல் ஆவிஉயிர் மெச்சட்டும்.

மகாகுறிப்பு :- உலக சரித்திரம் - பொன் எழுத்து - செயல் வீரக்கல் மெய்க் கீர்த்திப் பிரதாபம் - இவ் அண்ணல் வரலாற்றில் இடம்பெறட்டும் - எமக்கும் அனைவருக்கும் பங்காகட்டும் !

சன்மார்க்க தவகூடம்,
கலைக்கோயில் நிர்வாகி,
ஆசிசாந்தகுரு ஐயாச்சாமி
வித்துவக் கலைஞன்

கந்தரோடை,
126, கல்லூரி வீதி,
சுன்னாகம்,
15-3-1986.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைப்பாக்கள்

## விநாயக வணக்கம்

திருவுங் கல்வியுஞ் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

### திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச் செய்தது

பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப்பல
    வுலகினி லுயிர் வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங் கைதொழக்
    காதலித் துறை கோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழின்மஞ்ஞை
    நடமிடு மாதோட்டத்
தொண்டர் நாடோறுந் துதிசெய்கே
    தீச்சர மதுதானே.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

### திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச் செய்தது

கருவுற் றிருந்துன் கழலே நினைந்தேன் கரும்புவியில்
தெருயிற் புகுந்தேன் றிகைத்தடி யேன்றன் றிகைப்பொழிவி
உருவிற் றிகழு முமையாள் கணவாவிடிற் கெடுவேன்
திருவிற் பொலிசத்தி முற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே.

### சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்தது

நீளநினைந் தடியே னுமை நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவா ளவள் வாடி வருந்தாமே
கோளிலி யெம்பெரு மான்குண்டை யூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை யெம்பெருமா னவை யட்டித் தரப்பணியே.

### மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்தது

சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்தன்
    கண்ணிணை நின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
    மணிவார்த்தைக் காக்கிஐம் புலன்கள்ஆர
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
    மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
    தனிச் சுடரே இரண்டுமிலித் தனியனேற்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருமாளிகைத்தேவர் அருளிச் செய்தது

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடையதோர் நெருப்பே
வேறணி புவனபோகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன் செய் அம்பலத்தரசே
ஏறணி கொடியெம் மீசனே உன்னைத்
தொண்டனேன் இயம்புமா றிசையே.

### சேந்தனார் அருளிச் செய்தது

குழலொலி யாழொலி கூத்தொலி
யேத்தொலி யெங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணள வுஞ் சென்று
விம்மிமிகு திருவா ரூரின்
மழவிடை யாற்கு வழிவழி யாளாய்
மணஞ் செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடும் கூடியெம்
மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

### திருமூலர் அருளிச் செய்தது

ஐந்து கரத்தனை யானைமு கத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

### பட்டினத்தடிகள் அருளிச் செய்தது

வாளான் மகவரிந் தூட்ட வல்லேன் அல்லன்மாது சொன்ன
சூளா லிளமை துறக்கவல் லேனல்லன் தொண்டு செய்து
நாளாறிற் கண்ணிடந் தப்பவல் லேனல்லன் நானினிச் சென்று
ஆளாவ தெப்படி யோதிருக் காளத்தி யப்பருக்கே.

### அபிராமி அந்தாதி

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம்போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்குமம் தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி எந்தன் விழுத்துணையே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமால் திருமொழி

வாடினேன் வருந்தினேன் மனத்தால்
பெருந்துயர் இடும்பையில் பிறந்து
கூடினேன் கூடி இளையவர் தம்மொடு
அவர் தரும் கல்வியே கருதி
ஓடினேன் ஓடி உலப்பதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன் நாடி நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

## சேக்கிழார் சுவாமிகள் அருளிச் செய்தது

ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள வளப்பெருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந் திருந்து சாத்வீகமேயாக
விந்துவார் சடையா னாடு மானந்த வெல்லையிற் றனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்திற் றிளைத்து மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

## அருணகிரிநாதர் அருளிச் செய்தது

இத்தரணி மீதிற் பிறவாதே
எத்தரொடு கூடிக் கலவாதே
முத்தமிழை யோதித் தளராதே
முத்தியடியேனுக் கருள்வாயே
தத்துவ மெய்ஞ் ஞானக் குருநாதா
சத்த சொரூபா புத் தமுதோனே
நித்தியக் கிருதா நற் பெருவாழ்வே
நிர்த்த ஜெகஜோதிப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது அன்பிற்குரிய குடும்பத் தலைவர் முதலியார் வை. மகேசன் நோய்வாய்ப்பட்டிருந்த காலத்தில் அவருக்கு சிகிச்சை அளித்தோருக்கும், பார்வையிட்டோருக்கும். ஆறுதல் வார்த்தை கூறியவர்களுக்கும் சிவபதமடைந்த பின்னர் அவரது பூதவுடலை அவரது நவாலி இல்லத்துக்குக் கொண்டுவர உதவி செய்தவர்களுக்கும், அவருடைய இறுதிக் கிரியைகளில் பங்குபற்றியவர்களுக்கும் மலர் வளையங்கள், மாலைகள், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், அவரது சேவையைப் பாராட்டியவர்களுக்கும் மற்றும் உதவிகள் ஆற்றியவர்களுக்கும் எமது பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். இந் நினைவஞ்சலியில் இடம்பெறும் அனுதாப உரைகள், கட்டுரைகள், இரங்கற் பாக்கள் மூலம் அவரில் தாம் கண்ட குணாதிசயங்களை எழுதி உதவியவர்களுக்கும் மனப்பூர்வமான எம் நன்றி உரித்தாகும். வேறு பலர் தமது கருத்துக்களைத் தருவதற்கு விரும்பியும், யாவற்றையும் குறுகிய காலத்தில் அச்சிட்டு வெளியிட முடியாமைக்கு வருந்துகிறோம். இறைவன் அவரது ஆத்மாவை தமது குஞ்சித பாதங்களில் சாந்தியடைய அருள் பாலிக்கும் வண்ணம் முழுமுதற் கடவுளை திரிகரண சுத்தியுடன் இறைஞ்சுகிறோம்.

*நன்றிப்பெருக்குள்ள*

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org